கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(22.12.2019 - 22 மார்கழி, 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 10, கதிர் - 222, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி


ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

# கடவுள் நம்மோடு

## கலங்க வேண்டாம்.

கிறிஸ்மஸ் சிறப்பிதழ்



மேர்சலின் ஹீன்கென்ட

மண்ணில் கால் பதித்து
மனிதம் வளர்க்க வந்த
இயேசுவே

**உம் வருகையால்...**

துக்கம் மறைந்து
மகிழ்ச்சி பிறக்க வேண்டும்.

அச்சம் மறந்து
அமைதி பிறக்க வேண்டும்

பாவம் மறந்து
மீட்பு பிறக்க வேண்டும்

கண்ணீரும் செந்நீரும் மறந்து
மாற்று உலகம் பிறக்க வேண்டும்

எம் ஆசைகளை நிறைவேற்ற
பாலன் இயேசுவே உம் பிஞ்சுக்
கரத்தால் ஆசீர்தாரும்.

மண்ணில் உதித்த பாலகனே.
இந்நாளில் அனைவரும்
எல்லா அருளும் வளமும்
பெற்று வாழ
என் இனிய கிறிஸ்மஸ்
வாழ்த்துக்கள்.

– ஆசிரியர்.

# வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்டு ஊடகத்தை பயன்படுத்த வேண்டாம்!

யூபிலி விழாவில் பேராயர்





15



150வது ஆண்டு விழாவில் இயக்குனரின் உரை...

15

இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா ( தி.பா 96)



# இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் கிறிஸ்மஸ் செய்தி -2019

பெத்லகேமில் நிகழ்ந்த இயேசுவின் பிறப்பை கிறிஸ்மஸ் என நாம் கொண்டாடி மகிழ்கின்றோம். கிறிஸ்து இயேசுவின் பிறப்பு என்பது மனித வரலாற்றில் கடவுளின் அன்பான நுழைவு ஆகும். புனித பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் கடவுள் தன் தெய்வீகத் தன்மையை மனிதர்களுடன் பகிர்ந்து கொள்வதாக குறிப்பிடுகின்றார். “கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்” (பிலி 2:6-7) கடவுள் மனுதகுலத்தின் மீது தனது அன்பின் ஆழத்தை வெளிப்படுத்திய நிகழ்வாகவே கிறிஸ்து இயேசுவின் மனித அவதார மறையுண்மை விளங்குகின்றது. தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்” (யோவா 3:16)

கிறிஸ்துவால் மட்டுமே கொடுக்கக்கூடிய வாழ்க்கையின் முழுமையில் நாம் பங்குபற்ற வேண்டுமெனில் அது அவரது உலக வருகையின் நாம் மகிழ்ச்சியுடன் கிறிஸ்மஸ் கொண்டாடக் காரணமாகின்றது. இயேசு நம்மிடம் வந்து நம்முடன் வசிக்கின்றார். இயேசுவுக்கு வழங்கப்பட்ட பெயராகிய இம்மானுவேல் என்பது “கடவுள் நம்முடன்” என்பதாகும். கிறிஸ்மஸ் கொண்டாட்டம் என்பது கடந்தகால நிகழ்வை மாத்திரம் நினைவுகூர்வதாக இருக்கக்கூடாது. நாம் வாழும் சமுதாயத்தில் அதன் முழுமைக்கும் சாட்சியம் அளிக்கும் வகையில் நமது கிறிஸ்தவ விசுவாசத்தின் உண்மையான ஆழத்தையும், வாழ்க்கையின் மதிப்பையும் மென்மேலும் ஆழமாக புரிந்துகொள்ள கிறிஸ்மஸ் வழிவகுக்க வேண்டும்.

நம்மைத் தேடி இவ்வுலகிற்கு வந்த கிறிஸ்து இயேசுவை நாம் நமது வாழ்க்கையிலும், நமது குடும்பங்களிலும், நமது சமுதாயத்திலும் அழைத்து அவருக்கு இடம் கொடுக்க வேண்டும். பெத்லகேமில் பிறக்க கிறிஸ்துவின் எளிமையான பிறப்பு எமது மனமாற்றத்திற்கான ஒரு உலகளாவிய அழைப்பாகும். இந்நிலையில் பன்மைத்துவ வேறுபாடுகளைக் களைந்து, மற்றவர்களின் தேவைகளுக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். கிறிஸ்மஸ் ஒரு மகிழ்ச்சியான நிகழ்வு என்றாலும் அதனை வெறுமனே வெளிப்புறக் கொண்டாட்டமாக மாற்றாமல் அதன் உண்மையான நோக்கத்தை உணர்ந்தவர்களாக இயேசுவை நம் வாழ்வின் இறைவனாகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு பிறரை ஆழமான அன்பு செய்வதில் தான் கிறிஸ்மஸின் நோக்கம் நிறைவேறுகின்றது. இவ்வருட ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை நம் மக்களுக்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது. இதனைக் கருத்திற்கொண்டு கிறிஸ்மஸ் விழாவில் ஆடம்பரங்களைத் தவிர்த்து ஆன்மீக விடயத்தில் நாம் அதிக கவனம் செலுத்துவோம்.

இயேசு ஏழையாகப் பிறந்ததால் ஏழைகள் மட்டில் நாம் அக்கறை கொள்ளவும், நம் சமூகத்தில் நிலவும் மக்களின் தேவைகளை உணரவும், அவர் தம் துன்பங்களை உணரவும் இந்நேரம் அழைக்கப்படுகின்றோம். கிறிஸ்மஸ் நாட்களில் பல்வேறு வகையான சமூக சேவைகளில் நாம் ஈடுபடவேண்டும். வறுமையை ஒழிக்க செழிப்பான பொருளாதார கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டும். மனித மாண்பை மதிக்கும் வகையில் ஒருவரை ஒருவர்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# “அனைத்தையும் விட எனது மக்கள் எனக்கு பெறுமதியானவர்கள்... அவர்களை நான் பாதுகாப்பேன்”



அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில், “அனைத்தையும் விட எனது மக்கள் எனக்கு பெறுமதியானவர்கள் என்பதால், பாஸ்கு ஞாயிறு குண்டுத் தாக்குதல ஏற்கனவே தெரிந்திருந்தால், எமது தேவாலயங்களை மூடி வைத்து என்றாலும் மக்களைப் பாதுகாத்திருப்பேன்” என கூறினார்.

உயர்நீதிமன்ற நீதிபதி ஜனக் த சில்வா உள்ளிட்ட ஐவர் அடங்கிய நீதிபதிகள் முன்னிலையில், அரச உயர் சொலிசிஸ்டர் ஜனரல் அயொஷா ஜினசேன அவர்களினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் தொடர்ந்து, பாஸ்கு ஞாயிறு தாக்குதலில் தொடர்புடையவர்களை இனம் கண்டு அவர்களுக்கு தண்டனை வழங்குவதுடன் இத்தாக்குதலை அறிந்திருந்தும் தடுக்காது இருந்தவர்களையும் தண்டிக்க வேண்டும். எதிர் காலத்தில் இவ்வாறான தாக்குதல்கள் ஏற்படாதவாறு இந்நாட்டு புலனாய்வுத் துறையை சக்திப்படுத்தி, நாட்டின் அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் சந்தர்ப்பங்களை அறிந்து, அவர்களை சட்டத்தின் முன் நிறுத்த, ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்றார்.

பேராயர் சார்பாக ஜனாதிபதி வழக்கறிஞர் சமன் பரனாந்து, சவில் பெரேரா உள்ளிட்ட குழுவினரும் ஆஜராகியதுடன், கொழும்பு மறைமாவட்ட உதவி ஆயர்கள், மறைமாவட்ட அருட்பணியாளர்களான பரிபாலகர், பொருளாளர், செயலாளர் அடிகளார்களும் இணைந்துக் கொண்டனர்.

# எமது மத நம்பிக்கையின் தேசிய கௌரவம் பெறுவது என்பது எமது முன் நின்ற சவாலாகும்!



கொழும்பு புனித பிரிஜட் கன்னியர் மட கேட்போர் கூடத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவின்போது, அருட்பணி. சிசில் ஜோய் பெரேரா அடிகளாரின் கத்தோலிக்க பாடல்கள் அடங்கிய இசை இருவெட்டு வெளியீட்டின் போது, பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, அடிகளாரை கௌரவித்து கருத்து தெரிவிக்கையில். எமது மறைமாவட்ட இசைக் கலைஞரான அருட்பணியாளர் ஒருவர் 40 வருடங்களாக எமது கத்தோலிக்க மறையைத் தழுவி, இலங்கை கலாச்சாரங்கள், எமது உரிமைகள், மதத்தின் ஆழமான கருத்துக்களை புதிய வடிவில் பிரதிபலித்து, மக்களைப் போஷிக்கும் பாடல்களை இயற்றி வெளியிடுவதில் அருட்தந்தைக்கு நிகர், அவரே என்றுரைப்பதில் பெருமையடைகிறேன்.

இப்பாராட்டு விழாவில் ஒய்வுபெற்ற அதி. மேதகு. பேராயர் ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகை, கண்டி ஆயர் மேதகு. வியானி பர்னாந்து ஆண்டகை, சிலாப ஆயர் மேதகு. வலன்ஸ் மெண்டிஸ் அன்ரனி பெரேரா ஆண்டகை, கொழும்பு மறைமாவட்ட உதவி ஆயர்கள் உட்பட அருட் பணியாளர்கள், அருட் சகோதரிகள் பலர் கலந்துக்கொண்டனர்.



அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, மத, இன, மொழி வேறுபாடின்றி நாட்டின் பிரச்சனைகளைக் கண்ணோக்கும் சிறந்த மதத் தலைவராகும்! கடந்த பாஸ்கு அனர்த்தத்தின்போது செயல்பட்ட விதம் இலங்கையில் மட்டுமல்ல முழ உலகத்திலும் தெரிந்த உண்மையாகும் என வண. பகலகம சோமரத்ன தேரர் கம்பா வரலாற்று விகாராதிபதி, கம்பா பங்கில் பிரன்டியமுள்ளை புனித பிலிப்நேரியர் தேவாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மண்டபத்தை ஆசீர்வதித்தபோது இவ்வாறு உரைத்தார்கள்.

**தகவல் : T. சுனில்**

# நத்தார் கரோல் போட்டி - 2019



2019ம் ஆண்டிற்கான நத்தார் கரோல் போட்டி நிகழ்ச்சிகள் கடந்த மாதம் அதாவது கார்த்திகை மாதம் 23ம் திகதி தூய சூசையப்பர் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலாம் இடத்தை வத்தளை வட்டாரம் நாயக்ககந்தை பங்கும், இரண்டாம் இடத்தை வடகொழும்பு வட்டாரம் கொட்டாஞ்சேனை பங்கும், மூன்றாம் இடத்தை இரண்டு பங்குகள் தட்டிக் கொண்டன. குருபெவிலை, பென்ரித் தோட்டம் மற்றும் வடகொழும்பு வட்டாரம் புதுச்செட்டித்தெரு பங்கு என்பன குறிப்பிடத்தக்கது.

**தகவல் : அருட்பணி. குருசன் குமார பெரேரா, இயக்குனர்.**



கொழும்பு சங்கிரில்லா உணவு விடுதியில் நடந்த பாஸ்கு அனர்த்தத்தின் போது பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வில், கலந்துக்கொண்டு பாதிக்கப்பட்ட பெற்றோர், பிள்ளைகள் உறவினர்களை சந்தித்து உரையாடுகையில், பாஸ்கு அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களை மீண்டும் தர முடியாது. ஆனால் உங்கள் கண்ணீரை துடைக்க எம்மாலான முயற்சி-களைச் செய்வோம், கடந்த காலத்தை மறந்து, வைராக்-கியத்திலிருந்து விடுபட்டு வாழ்க்கையை முன்னோக்கி நடத்த முயலுங்கள்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI
ඥාන ඔලි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
22 மார்கழி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# "கிறிஸ்மஸ் செய்தி என்பது அனைவருக்கும் பகிரப்படவேண்டிய ஒன்றாகும்."

கிறிஸ்து பிறப்பு என்றாலே நம் உள்ளத்தில் ஓர் ஆனந்தம். நம் கண்களில் மின்னிடும் ஓர் அற்புத ஒளி, காரணம் நாம் எண்ணுவதும், நாம் எண்ணாததும் நிகழ்ந்தேறும். புத்தாடை, இனிப்பு, பரிசுப் பொருட்கள் நம் கரங்களைத் தழுவி செல்லும். நம் திருத்தந்தை இந்த நாளை அருளின் நாள், அமைதியின் நாள், அன்பின் நாள் என்று அழகாய்ச் சொல்கிறார். ஏனென்றால் கடவுளின் அருள் மனித உருவில் இம்மண்ணில் வந்த நாள், அமைதியின் அரசர் ஏழைக் குடிசையில் ஏழைக்காய் உதித்த நாள், இறைஅன்பைப் பகிர இறைமகன் இம்மண்ணில் மலர்ந்த நாள்.

ஆண்டுதோறும் கிறிஸ்து பிறப்பு நமக்குப் பெருமகிழ்ச்சியை அள்ளித்தந்தது ஆனால் சில ஆண்டுகளாய் இந்த நாள் சில சங்கடமான சூழலில் நம்மைச் சந்திக்கிறது. வெறும் மனிதர்களாகிய நாம் இந்தச் சங்கடமான சூழலில் இத்தகைய கொண்டாட்டம் தேவையா? என்று நம்மைக் கேள்விக் கேட்கத் தூண்டுகிறது. இங்கு நாம் சிந்திக்க வேண்டும்.

"ஆனந்த மழையில் நானிலம் மகிழ மன்னவன் வருகின்றான்" என்று மகிழ்வோடு பாடும் நாம் உணர வேண்டியது யாதெனில், மன்னவன் இயேசு நம் இன்பத்தில் மட்டுமல்ல மாறாக நம் துன்பத்திலும் நம்முடன் இருக்கின்றார் என்பதைத் தான். அவர் ஒருபோதும் நம்மை விட்டுப் பிரிவது இல்லை என்பதை உணர்ந்துகொள்வோம். அமைதியின் அரசராய், அன்பின் சிகரமாய் விண்ணை விட்டு மண்ணில் வந்து உறவின் பாலமாய் உலகில் உதித்தார். குடிலில் உதித்த பாலன் நம் உள்ளத்தில், இல்லத்தில் வர விசாலமாய் கதவுகளைத் திறந்து வைப்போம். இறைத் தென்றல் நம் குடும்பங்களில் தவழ்ந்தாட, தன்னையே தாழ்த்திய இயேசு ஆண்டவரின் மீட்பினை எல்லோரும் அறிந்திட இறைமகன் இயேசுவின் சாட்சிகளாய் வாழ்ந்திடுவோம்.

கிறிஸ்மஸ் செய்தி என்பது அனைவருக்கும் பகிரப்படவேண்டிய ஒன்றாகும். வானதூதர்கள் தங்களுக்கு அளித்த செய்திகளை இடையர்கள் எவ்வாறு பிறரோடு பகிர்ந்துகொண்டார்களோ, அதைப்போலவே நாமும் அன்பைப் பகிர்வதின் மூலமும், உறவுகளை மேம்படுத்துவதின் மூலமும் இறையரசை உலகிற்கு எடுத்துரைக்க கடமைப்பட்டுள்ளோம். எனவே இயேசுவின் அன்பைப் பிறரோடு பகிர்ந்து, மகிழ்ந்து கொண்டாட உங்கள் அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன். அத்தோடு வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு பெருவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் மெசஞ்சர் பத்திரிகையானது தனது 150வது ஆண்டை சிறப்பித்துக் கொண்டிருக்கின்றது. இப்பத்திரிகையின் அனைத்து முன்னாள் இயக்குனர்களுக்கும், தற்போதைய இயக்குனர் அருட்பணி. கலாநிதி கமிலஸ் பெர்னாண்டோ அடிகளாருக்கும், உதவி ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், அச்சக ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். இப்பத்திரிகையானது 1869ம் ஆண்டு மாசி மாதம் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை தொடர்ச்சியாக இயங்கி வருகின்றமை பாராட்டத்தக்க விடயமாகும்.

**இறையாசீருடன் ஆசிரியர்**



# எதிர்பார்த்தவர் வரும்போது...

## இயேசுவின் பிறப்புக்கு ஆயத்தம்

இயேசுவின் பிறப்பை, அவரது வருகையை எதிர்நோக்கியிருக்கும் காலம் இது. ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே எத்தனை எத்தனையோ தயாரிப்புகளை மேற்கொள்கிறோம். ஒவ்வொரு நாளும் உழைத்து இயந்திரமான வாழ்க்கையில் இருந்து சற்று விடுபட்டு, புத்துணர்ச்சியோடு மகிழ்வோடு இயேசுவின் பிறப்பை எதிர்பார்த்து செய்யும் செயல்பாடுகள் அதிகம். குடும்பத்தில் குதூகலத்தையும், பகிர்தலையும், பாசத்தையும், ஒற்றுமையையும் அளிப்பது இப்படியான விழாக்கள் தான்.

இயேசுவின் பிறப்பு விழா மற்ற தலைவர்களின் பிறந்தநாள் போன்றது அல்ல. இது ஓர் உன்னத விழா, பாவ இருளில் மூழ்கியிருந்த மக்களை மீட்க உலகின் ஒளியாக கிறிஸ்து இவ்வுலகில் தோன்றினார். ஆயிரக்கணக்கான வருடங்களாக அரசர்களும், மறைநூல் அறிஞர்களும், ஞானிகளும் மிகுந்த ஏக்கத்துடன் எதிர்பார்த்திருந்த இறை மைந்தனின் பிறப்பு உலக வரலாற்றில் மிகப்பெரிய சிறப்பு பெற்றதாக



கொண்டாடப்படுகிறது.

இயேசு பிறந்த ஊர் பெத்லகேம், எபிரேய மொழியில் "பெத்லகேம்" என்றால், "உணவு இல்லம்" என்று பொருள் "நானே வாழ்வு தரும் உணவு" என்று சொன்ன மெசியா, விலங்குகள் உணவருந்தும் தீவனத் தொட்டியில் வாழ்வு தரும் உணவாகக் கிடத்தப்பட்டிருந்தார். மனிதரைக் கடவுள் அளவுக்கு உயர்த்த அவர் தம்மையே இவ்வளவு தூரம் தாழ்த்திக் கொள்ள வேண்டியதாயிற்று. இவ்வாறு இறைமகன் மனிதராய்ப் பிறந்த விழாவைத் தான் ஆண்டுதோறும் மார்கழி மாதம் கொண்டாடி வருகின்றோம்.

இவ்விழா கொண்டாட்டங்களில் மாறுதல் இருக்கிறதா? நம் வழிபாட்டு முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளதா? நம் வாழ்க்கை முறைகளிலும் மாற்றங்கள் உண்டா? சிந்தித்துப் பார்ப்போமானால்.... அர்த்தம் இல்லையே என்று தான் சொல்ல வேண்டும்.

### கிறிஸ்து பிறப்பு விழாவை அர்த்தத்தோடு கொண்டாடி மகிழ

- நம் ஆன்மாவை அசுத்தமாக்கும் பாவச் செயல்களை அடியோடு விலக்கி ஒப்புரவு அருட்சாதனத்தால் தூய்மையாக்குவோம். நம்மிடமுள்ள வேண்டாத பாவ பழக்க வழக்கங்களையும் விட்டு விலகுவோம்.
- ஏழை எளியோர்க்கும், ஆதரவற்றவர்களுக்கும், ஊனமுற்றோருக்கும், விதவைகளுக்கும், பிணியுற்றோருக்கும் உதவ முன்வருவோம்.
- செப, தப, நோன்பு மற்றும் ஒறுத்தல் முயற்சிகளுக்கு அதிக நேரம் ஒதுக்குவோம்.
- அன்பு, பரிவு, தாழ்ச்சி, எளிமை, இரக்கம் போன்ற நற்செயல்களைக் கடைப்பிடிப்போம்.

ஆகவே இறைவனின் கருணையால் மீண்டும் ஒரு கிறிஸ்து பிறப்பு காலத்தில் கால்பதிக்கும் நாம், மேற்குறிப்பிட்டவைகளை மகிழ்ச்சியோடு செய்து, மகிழ்ச்சியாக கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட ஆயத்தமாகுவோம்.

# உண்மை உறைக்கும்



# நத்தார் சிறப்பிதழ்



# ஒரு பிறப்பு உலகை உன்னதமாக்கியது !

## அன்பாய் வாழவே அன்பான இறைவன் மனிதனைப் படைத்தார்





தம்முடைய ஆருயிரையும் சாயலையும் அவனுக்குத் தந்தார். பரிசுத்தமும் உன்னதமுமான நிலையில் அவனை வைத்தார். அவனை அன்பு செய்தார். மனிதனோ இறைவனின் அளவற்ற அன்பை மறந்தான். பாவம் செய்து இறைவனுடைய உறவை முறித்துக்கொண்டான். ஆனால் இறைவனுடைய அன்போ குறையவே இல்லை. இறைவன் மனிதனை எத்துணை அளவுக்கு அன்பு செய்தார் எனில் தம் ஒரே மகனையே உலகிற்கு அனுப்பினார். ஆம் வாழ்வதற்காகவே மனிதன் பிறக்கும் வேளையில் இறப்பதற்காகவே இறைமகன் இயேசு பிறந்தார். பாவ இருளில் மீட்பை இழந்து தவித்துகொண்டிருந்த மனிதருக்கு உலகில் நல்மனத்தோருக்கு அமைதி உண்டாகுக என உலக அரசரான இயேசு இவ்வுலகில் அவதரித்தார்.

கடவுள் மனிதனாக அவதரித்த சூழ்நிலைகளை கவனித்தால் அங்கே ஏழ்மையின் நிலை தெரிகிறது. இயேசு பிறப்புக்கு ஆடு மாடு தங்கும் வானம் பார்த்த கூரையான மாட்டுக் குடில் தான் கிடைத்தது. சிதறிக் கிடந்த வைக்கோல் பஞ்சு மெத்தையானது. எளிய பெற்றோர், கைவிடப்பட்ட சூழல், தங்க இடமின்றி அவலம். மாட்டுக் குடிலில் பிறப்பு, தீவனத்தொட்டியில் குளிப்பாட்டு என எத்திசையிலும் ஏழ்மையின் கோலங்களே. இந்த உலகையே உண்டாக்கிய தேவன் தம் ஒரே மகனையே மாட்டுத் தொழுவத்தில் பிறக்க செய்ததின் வழியாக ஏழைகளுக்கு வாழ்வளிக்க வந்தவரே இயேசு என நிரூபித்தார்.

இயேசு சமாதானத்தை உலகிற்கு கொண்டு வந்தார். ஆனால் இச்சமாதானம், இன்று நம்மிடையே இல்லை. இறையன்பும், பிறரன்பும் இல்லாதவருக்கு சமாதானம் கிடைக்காது. சமாதானத்தை தன் இதயத்தில் பதித்து மனிதத்தன்மை மதிக்கப்படும்போது அங்கு அன்பும் பாசமும், பரிவும், பக்தியும், உருவாகிறது. மனிதத் தன்மை மறக்கப்படும்போது அங்கு விரக்தியும், வெறியும், வன்முறையும், அடக்குமுறையும் ஏற்படுகிறது. மனித மாண்புகள் மதிக்கப்பட்டு மானிட உரிமைகள், காக்கப்பட்டு நீதியும், நேர்மையும், நிலைநாட்டப்பட்டு, தேவையில் உழல்வோருக்கு ஈர நெஞ்சம் கொண்டு உதவுதல் பொது நலன் பேணி, சுயநலம் அகற்றப்பட்டால், மனித மனதிலே சமாதானம் நிலவும் நிம்மதி பிறக்கும், இதையே கிறிஸ்து பிறப்பு விழா வெளிப்படுத் துகின்றது.

இன்று கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடும் நாம் பிறந்த இயேசுவுக்கு என்ன கொடுக்கப் போகிறோம்? உங்களில் சிறியோராகிய ஒருவருக்கு என்ன செய்கின்றீர்களோ, அதை எனக்கே செய்கிறீர்கள் என்ற இறைவார்த்தைக்கேற்ப ஏழைகள், அனாதைகள், நோயாளிகள், கைம்பெண்கள், கைவிடப்பட்டோர், ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யும்போது இயேசுவுக்கே உதவி செய்கிறோம்.

**கிறிஸ்மஸ் செய்தி என்பது அனைவருக்கும் பகிரப்பட வேண்டிய ஒன்றாகும். ஆகவே நாமும் பகர்வோம். கிறிஸ்து பிறப்பு விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவோம்.**

## கிறிஸ்து பிறப்பு நமக்காக !



இந்த இனிய நாளை நமதாக்குவோம்!
ஒரு நொடியில் உலகத்தை புரட்டி போட வேண்டாம்.
மாறாக நீங்கள் உண்ணும் உணவிலிருந்து
உங்கள் அருகில் வாழும் ஏழைக்கு உணவு
கொடுங்கள்.
உங்கள் ஆடம்பரத்தை குறைத்து
ஏழையின் உடலை மறைத்திட உடை கொடுங்கள்
எல்லாவற்றிற்கும் மேலாய், உங்கள் பெருமையை
மறந்து
ஏழைகளையும் மனிதர்களாக பாருங்கள்
அப்போது அவர்களின் உதட்டோரம் எழும்
புன்னகையால்
உங்கள் உள்ளத்தில் இயேசு பிறப்பார்
அவர்களின் உள்ளத்தில் எழும் நன்றியால் பாலன்
இயேசுவின் ஆசீர்
உங்கள் இல்லத்தில் நிறையும்.
உங்ள் உள்ளத்தில் இயேசு பிறக்கவும்
உங்கள் இல்லத்தில் இயேசுவின் ஆசி தங்கவும்
தயாராகுங்கள்

**உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக!**
**பூவுலகில் நல்மனத்தவர்க்கு அமைதி உண்டாகுக !**

# மன நிறைவான கிறிஸ்மஸ்



**சிறு கதை**



தாங்கள் இறப்பதற்கு முன் எப்படியாவது கிறிஸ்து பிறந்த புண்ணிய தலத்திற்கு திருயாத்திரை சென்று வர வேண்டுமென்று ஆசைப்பட்ட இரு ரஷ்ய கிறிஸ்தவர்களின் வாழ்க்கையை புகழ்மிக்க ரஷ்ய நாவல் ஆசிரியர் லியோ டால்ஸ்டாய் விவரிக்கிறார்.

இதற்காக அவர்கள் தம் சிறு நிலத்தில் இருந்து கிடைக்கும் குறைந்த வருவாயை சிறுகச் சிறுகச் சேமித்து வைத்தனர். பாலஸ்தீனப் பயணத்திற்குப் பணம் சேர்ந்தபோது வயது கூடியிருந்தது. மனம் தளர வில்லை. பாலஸ்தீனத்தில் நடை பெறும் கிறிஸ்மஸ் திருப்பலியில் கலந்து கொள்ள முடிவு செய்தனர்.

தகுந்த முன்னேற்பாடுகள் செய்து, நில மார்க்கமாக எடிசா துறைமுகத்தை அடைந்தனர். ரஷ்யாவின் நாட்டுப்புற மாக அவர்கள் செல்கையில் அங் குள்ள ஏழைகள், ஆதரவற்றோர், விதவைகள் படும் துயர வாழ்வைக் கண்டனர். பயணம் செல்லும் பக்தர்களில் ஒருவர் தனது சேமிப்பை ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தார்.

உடன் சென்றவர் செபிப்பதிலும், நற்செய்தி வாசிப்பிலும் ஈடுபட்டார். துறைமுகத்தை அடைந்தபோது தாராள மனம்கொண்ட திருப்பயணி தன் சேமிப்பை ஏழைகளுக்கு வழங்கி விட்டதால் பயணத்தைத் தொடர முடியவில்லை. மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் வீடு திரும்பினார்.

அடுத்தவர் கப்பல் ஏறி கிறிஸ்து பிறந்த புண்ணிய பூமியை அடைந்தார். கிறிஸ்துமஸ் திருப்பலியில் பங்கேற்றார். அங்கு ஒரு புதுமை நிகழ்ந்திருந்தது. திருப்பலி பீடத்தின் நடுவில், ஊர் திரும்பிய நண்பர் ஒளிரும் முகத்துடன் நிற்பதைக் கண்டார். திருப்பலி முடிந்ததும் அவரைச் சந்திக்கலாமென்று நினைத்தார். திருப்பலி முடிந்து வெளியில் எங்கும் சுற்றிப் பார்த்தும் நண்பர் கண்களில் அகப்படவில்லை. வருத்தத்துடன் வீடு திரும்பிவிட்டார். ஊர் வந்து சேர்ந்த பின்புதான் தனது நண்பர் புண்ணிய பூமிக்கு வரவில்லை என அறிந்தார். அப்படியானால் பீடத்தில் நான் கண்டது?! அவருக்கு உண்மை விளங்கியது. ஏழைகள்பால் அன்பு கொண்ட நண்பரின் தோற்றத்தில் இயேசுவே பீடத்தில் காட்சி கொடுத்திருக்கிறார். வழிப்பயணத்தில் தாம் வாசித்த விவிலிய வாசகங்கள் நினைவுக்கு வந்தன. உங்களில் எளியவருக்குச் செய்யும் உதவிகளை எனக்கே செய்தீர்கள்"

புண்ணிய பூமியில் திருப்பலி கண்டதன் பலனை தான் முழுவதுமாக அடையவில்லை என உணர்ந்தார்.





# உறவுகளின் இழப்பும் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவும்



முப்பது ஆண்டுகால உள்நாட்டு போரினை வெற்றி கொண்ட இலங்கை நாடு, இவ்வாண்டு சித்திரை மாதம் மீண்டும் ஒரு தீவிரவாத தாக்குதலுக்கு உள்ளாகி பல உயிர்களை இழந்து தவிக்கின்றது. கறுப்பு உயிர்த்த ஞாயிறு (Black Easter) என்று நாம் நினைவு கொள்ளும் சித்திரை மாதம் 21ம் நாள் எம் வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு தருணம். கிறிஸ்துவின் உயிர்ப்பினை மகிழ்வுடன் கொண்டாட ஆலயம் சென்ற எம் உறவுகள் அன்று தங்கள் உயிரை இழந்து அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தி, இன்றளவும் அந்த நினைவலைகளை கொண்டு செல்கின்றது. கத்தோலிக்க கிறிஸ்தவ சமூகம் இஸ்லாமிய தீவிரவாத தாக்குதலுக்கு முகங்கொடுத்த, அந்த ஆறாத வடுக்கள், இன்றளவும் தாங்கிச் செல்கின்ற நிலையில், 8 மாதங்கள் கடந்துவிட்ட இத்தருணத்தில் கிறிஸ்துவின் பிறப்பு விழாவினை கொண்டாட நாங்கள் ஆயத்தமாகியுள்ளோம்.

பலர் இத்தாக்குதலுக்கு எதிராக குரல் கொடுத்தார்கள் அன்று. பலர் இந்த நினைவலைகளை தாங்கிய படங்கள், வீடியோக்கள், சிந்தனை சொற்கள் போன்றவற்றை சமூக வலைத்தளங்களில் தோன்ற செய்து அதனை மறக்காமல் நினைவுகூர்ந்து வருகின்றார்கள். பலர் இதற்கான நியாயத்தை கேட்கவும். இதற்கு தக்க நீதி கிடைக்க வேண்டும் என்றும் குரல் கொடுத்தார்கள். ஆனால் இந்த நிலையில் அற்ற குரல்கள் யாவும் முடங்கி விட்ட நிலையில், நாம் மறந்து விட்ட இந்த நிலையில் மார்கழி மாத பணியில் நனைந்து நமக்கே உரித்தான விழாவினை கொண்டாட ஆயத்தமாகி உள்ளோம். இந்த உறவுகளின் இழப்பு இன்று இயேசுவை அதிகமாக எங்கள் உள்ளங்களில் பிறக்கச் செய்துள்ளார்.

இந்த சிந்தனையின் பின்னணியில் சமாதானத்தின் அரசர் பிறந்துள்ளார். அவரை ஆராதிக்க செல்வோம் என்ற எமது விசுவாச நிலையில், நாம் இழந்துவிட்ட சமாதானத்தை கிறிஸ்து மீண்டும் பிறக்கச் செய்வாரா? இல்லை நாம் சமாதான அரசனை மறந்து விட்டோமா? என்ற சிந்தனையை தருகின்றது. கிறிஸ்தவம் என்பது துன்பத்தின் மதம், துன்பத்தின் வழியாக தான் இன்பம் உண்டு என்பதை கிறிஸ்து எமக்கு உணர்த்தினார். இயேசுவின் பிறப்பினை சிந்தித்து பார்க்கின்ற வேளையில் அன்று அன்னை மரியும், சூசையப்பரும் பல துன்பங்களுக்கு முகங்கொடுத்தார்கள். எனவேதான் அந்த துன்பம் இறுதிவரை இயேசுவின் வாழ்வில் இருந்தது. குழந்தை பிறக்க இடமில்லாது போனபோது, மாட்டுத்தொழுவத்தில் கிறிஸ்து பிறக்கின்றார். "Manger" என்று அழைக்கப்படும் இடம். மாடுகளுக்கான உணவு சேமிக்கும் இடம். அங்கே வந்து அவை தமது உணவினை உண்ணும். இயேசு இங்கே பிறந்தார் என்றால் இயேசுவின் பின்னர் உணவாக மக்களுக்கு வருவார் என்பதை முன்குறிக்கின்றது. இந்த முன்குறிப்பின் அடையாளமாக கிறிஸ்துவின் பிறப்பு, இன்று நாமும் துன்பங்கள் வழியாக பிறருக்காக நம்மை வாழ்வாக்க வேண்டும் என்பதை கற்பிக்கின்றது. இதனையே நமது உறவுகள் அன்று நமக்கு உணர்த்தினார்கள். "தன் நண்பர்களுக்காக உயிரை கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 15:13) என்பதை உணர்த்திய நம் ஆண்டவராகிய கிறிஸ்துவின் வாழ்வை போல, இன்று நாம் கொண்டாடும் விழாவுக்கு அர்த்தம் கொடுத்தார்கள் நம் உயிர்த்த ஞாயிறு சாட்சிகள். கிறிஸ்துவின் உணவில் பங்கு கொள்ள சென்ற உறவுகள் தங்களையே கிறிஸ்துவுக்காக கொடுத்தார்கள். இந்த அர்ப்பணம், இந்த விசுவாசம் தான் இன்று நம் கிறிஸ்து பிறப்பு விழாவினை கொண்டாட அடிப்படையாக உள்ளது. நாமும் கிறிஸ்துவைப் போல் பிறருக்கு உணவாக வேண்டும். தமது சரீரத்தால் அல்ல, நமது வாழ்வால், நமது நன்னெறியால், நமது நாளாந்த செயற்பாடுகளால். அப்போதுதான் கிறிஸ்து உணவானது போல நம்மை நாமே உடைக்க முடியும்.

பலர் சிந்திக்கக்கூடும், உறவுகளை இழந்தோம், நாம் ஏன் கிறிஸ்து பெருவிழாவை கொண்டாட வேண்டும்? இவ்வாண்டு கொண்டாடமல் அடுத்த ஆண்டு கொண்டாடலாம் என்று. இந்த பெருநாள் அன்றும் ஆலயத்திற்கு செய்ய பயம் காரணம் இன்றும் தொடர்ந்து காவல்துறையினரால் ஆலயம் பாதுகாக்கப்படுகின்றது. இந்த நிலையில் ஏன் கிறிஸ்து இவ்வாறனதொரு நிலையினை எமக்கு கொடுத்தார் என்ற ஏக்கம் எம்மிடையே இருக்கலாம். இதற்கான சிந்தனையினை பார்க்கின்ற போது, இதனை இறையியல் ரீதியாக கருதாமல் மனித மட்டத்தில் காண்கின்ற போது "இந்த ஆண்டு எங்களுக்கு கிறிஸ்மஸ் வேண்டாம்" என்று பலர் சிந்திக்கக்கூடும். இயேசுவின் பிறப்பு மனித வரலாற்றில் நடந்த மாபெரும் உண்மை. இதனை யாராலும் மறுக்க முடியாது. கிறிஸ்து பிறந்தார். எம்மைப் போல் வளர்ந்தார், துன்பங்களுக்கு முகம் கொடுத்தார், இறந்தார், மீண்டும் மகிமையுடன் உயிர்த்தார். இந்த மறையுண்மையின் பின்னணியில் நாமும் இந்த பெருவிழாவினை கொண்டாடுவோம். கிறிஸ்துவைபோல் நாமும் வளர்வோம். துன்பங்களை சகித்துக் கொள்வோம், இவ்வுலக வாழ்வினை முடித்துக் கொண்டு மறுவுலக வாழ்விற்கு செல்வோம். அப்போதுதான் இந்த பெருவிழா எமக்கு விசுவாச பாதையை கொண்டு செல்ல வழிவகுக்கும். நம்மை பிரிந்த நம் உறவுகள் கிறிஸ்துவுடன் இணைந்து மறுஉலகில் அவரோடு இந்த பெருவிழாவை கொண்டாடி மகிழ்வார்கள் என்ற நம்பிக்கையின் எமது விசுவாசத்தை உறுதிபடுத்தி, எமது சமாதானத்தின் அரசனை எம் இல்லங்களில் பிறக்கச் செய்வோம்.

இழந்த உறவுகளை மறந்துவிடாமல் இன்றைய நாளில் கிறிஸ்து பிறந்தது போல, நம் உறவுகளும் மறுவுலகில் கிறிஸ்துவுடன் பிறந்துள்ளார்கள் என்பதை மனதில் கொண்டு அந்த சாட்சிய உறவுகளுடன் இணைந்து மீண்டும் கிறிஸ்துவை பிறக்கச் செய்வோம். நம் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு அனைத்து உள்ளங்களையும் வழிநடத்துவதாக. நாட்டில் நீதி, சமாதானம், நேர்மை போன்ற நல்ல விதைகளை வளர்த்து நூறு மடங்காக பலன் கொடுத்து, மக்கள் ஒன்றுபட்டு சகோதர சகோதரிகளாக வாழ பிறந்த பாலன் எம்மை வழிநடத்துவராக.

இழந்த உறவுகளுடன் இணைந்த கிறிஸ்துவின் பிறப்பு விழா வாழ்த்துக்கள்.



சகோ. டிலோய்ட்சன் பெர்னாண்டோ,
தேசிய குருமடம், கண்டி



# இன்று நீ பிறப்பாயா?



## கிறிஸ்மஸ் கவிதைகள்

இயேசுவே!
உமக்கு பிறந்த நாள்
விழா
உலகெங்கும்
கொண்டாடப்படுகின்றது

நினைத்து
பார்க்கவா
உன்
மதிப்பீடுகளை
ஏழையாய்
பிறந்தீரே ஏழைகளின்
விடியலுக்காய்,
சமத்துவம் பேணச்
சொன்னீர்
சகோதரத்துவம்
சாதியத்தால்
காணாமல் போனதே
இந்நிலை மாறிட
நீ பிறந்து வருவாயா?
உணவுப்
பொருட்கள் தொடங்கி
சவப்பொட்டி வரை,
கள்ளநோட்டு முதல்
கையூட்டுப் வரை
கட்சித் தேர்தல் முதல்
ஆட்சியாளர் வரை
ஓட்டுகளிலும் தொழிலும்,
கலப்படம்
இந்நிலை மாறிட
நீ பிறந்து வருவாயா?
அரசியலைக்
காக்க மனிதப் பலிகளா?

மயானமாக்கி விட்டு
சமாதானமா?

மக்கள் மக்கள்
என்பதெல்லாம்
பதவிக்கான வேஷமே
சுயநல முகமூடியில்
நடப்பதெல்லாம் மோசமே
பொதுமை பேசிப் புரட்சி செய்யும்
பழிகார கூட்டமே எங்கும்
இந்நிலை மாறிட
நீ பிறந்து வருவாயா?

காயங்கள்
தழும்புகள் இன்றும்
மாறவில்லை
மனம் அமைதி அடைய,
இன்னும்
இலட்சியங்களுடனும்
கறைகளுடனும்
வாழுகிறோம்
நீ என்னில்
பிறப்பாய் என்று....

---

நள்ளிரவு சாமக்காவல்
மேய்ப்பரிடம்
விண் ஒளி சூழ்ந்து
கவ்விடவே
வெண்ணிற ஆடை தனி
தூதர்களோ
அஞ்சாதீர் நற்செய்தி
உங்களுக்கே!
மீட்பர்
பிறந்துள்ளார்
உங்களுக்கு மெசியா
அவரே உறுதி செய்தார்
காம்பாம் வெண்துணியில்
பொதிந்து முன்னட்டில்
இளம் ஞாயிறு காண்பீர்
உன்னதங்களிலே
மகிமை உண்டாகுக!
உலகினமைதி
அவரால் உண்டாகுக!
விண்ணவரின் படைத்திரன்
தூதர் சேனை
வாழ்த்தியே சென்றனர்,
இறைபுகழுடனே
வாருங்கள்
போவோம் பெத்லகேம்
தூதுரைத்த நிகழ்வினை
கண்டிடுவோம்
பாருங்கள் இவர்போல
மழலையை எங்கேனும்
கேட்டதுண்டோ?
கண்டதுண்டோ?
ஏதம்மா
மெசியாவோடு வடிவழகை
எங்கேனும் நாமோ
கண்டதுண்டோ,
பாதமலர் உதைக்கும்
இம்மானுவேலா
பவளமாய் செங்கண்
பாருங்கடி
ஆயர்கள் கூடி
வந்திடவே - மரியா
ஆனந்த
வாரி
கொண்டாள்
தூய மணி
பாலன் கண்டு
அன்னை தூதர்
உரை செய்தியால்
மகிழ்ந்தாள்.
பாலனுக்குப்
பால்கொண்டார்.
ஆயர்கள் - மரி
கிழவழர்க்கு கொடுக்கவே
என்றார் குளிர்போக்க
கொண்டா போர்வை
என்றே கூறி கூடி பாடி
வணங்கினர்
கன்றினை
குட்டியைக்
கைக்கொடுத்து
கச்சையில்
பொன்மணி
பொதித்துரைத்து
கன்மை வருடி
உயிர்பெற்றால் - மரியா
(இள) ஞாயிற்றை
வணங்கியே நின்றார்.
வீடு தோறும்
சென்றே மெசியா
பிறந்துள்ளாராமே
நமக்காக
மாடமைக் குடிலில்
சென்று பார்த்து
நாமே
வருவோம்
மகிழ்ந்து சொன்னார்.

---

## இயேசு பிறப்பு

தோன்றித புகழும் விதமாகத்
தோன்றச் சென்னான் வள்ளுவனும்
ஊன்றிப் பார்த்தால் இதுபோல
உலகில் பிறந்தவர் யாருண்டு

பிறக்கும் போதே சிறப்போடு
பெரிதாம் மாண்பும் திகழ்வண்ணம்
சிறக்கும் படியாய் தோன்றியவர்
தேவன் மகனாம் இயேசுபிரான்!

இயேசு கிறிஸ்து பிறப்பினையே
எவர்க்கும் உணர்ந்து வானத்தில் - ஒளி
வீசும் விண்மீன் தோன்றியதே
விடிவும் புவிக்கே வந்ததென்ன!

மண்ணில் அமைதி மறுவுலகில்
மகிமை என்றும் நிலைப்பதற்கே
கண்ணில் தெரியும் மானிடனாய்
கர்த்தர் பிறந்தார் ஆரிரரோ...!

---

## இன்று நமக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவர் மெசியா

மாந்தரை மீட்க மனுவுருவெடுத்த மன்னவனே!
மாபெரும் செய்தி கேட்டு மண்ணுலகு மகிழ்ந்தது மாபரனே!
மானிடம் தளைத்தோங்க மைந்தர் நாம் களிப்புற்றோம்
மாமரி மைந்தனே! உன் வரலால்
மக்கள் நாம் மகிழ்ச்சியுற்றோம்!

வார்த்தையாகி மனுவுருவாகி வந்துதித்த வல்லவனே
வாழ்த்துக்கள் வழங்கி வாயார
வாழ்த்துகின்றோம் இறைவனே,
வானமும் வையமும் வரவேற்கின்றன வள்ளலே,
வாருங்கள் மானிடமே வணங்கி வாழ்த்துங்கள்
வல்ல தேவனை!

பகலவனாய் பாரில் வந்துதித்த எம் பாலகனே!
பரிவு, பாசம், இரக்கம், ஈதை உம் பரிசாய் எமக்களித்தாய்
பலகோடி மக்கள் உம் பிறப்பை சிறப்பிக்கின்றனர்.
பரம தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற பாரினில்
உதித்த மன்னவனே!

கருவாகி உருவாகி கன்னி மரியின் கருவினில் உதித்தவரே
கண்ணின் மணியாய் களங்கமில்லா பேரொளியாய் பிறந்தவரே
களிப்புடன் வந்தோம் உம்பாதம் காலமெல்லாம் காத்திடுவார்
கருணை மழை பொழிந்து காசினியை ஆசீர்வதித்தார்.

உலவும் உயிரினம் யாவும் இன்று உவகை கொள்ளுதே
உலகில் மாந்தர் அனைவரும் உயர்வை வெல்லுதே.
உன்னதர் இயேசுவின் வரவால் உவப்புடன் மனம் மகிழுதே
உதித்தார் உலகில் உதித்தார் உன்னத்தில் மகிமை தோன்றுதே

நமக்கென ஒரு பாலன் இன்று தொழுவினில் பிறந்துள்ளார்.
நல்லசெய்தி கேட்டு நானிலமும் மகிழ்ந்து ஆர்ப்பரிக்கின்றனர்.
நம்பிக்கையின் சின்னமாய் நம்மத்தியில்
வந்துதித்த நாயகனே,
நற்காரியங்கள் நாம் புரிய நம்மவரை
நாளெல்லாம் வழிநடத்துவாயே

சாந்தியின் மன்னனாய் சற்குருவாய் தோன்றினீரே
சாவை வென்று சத்தியவனாய் சகலர்க்கும்
சமாதானம் அருள்வீரே,
சாதி, மொழி, சமயப் பிரச்சனைகளை சரிப்படுத்துவீரே,
சாய்ராஜ்யம் நல்ல இராட்சியமாய் வாழ
எந்நாளும் ஆள்வீரே!

மீட்பின் ஒளியாம் மானிடரை மீட்க மாட்சியுடன் உதித்தீரே,
மீட்பர் எம்மை பாவத்திலிருந்து மீட்க பாரினில் வந்தவரே,
மீண்டும், மீண்டும் நாம் நல்வாழ்வு வாழ வழிவகுப்பீரே
மீட்க வந்தவரே வாருமையா வரம் தந்து ஆளுமையா

புதிய வானமும் புதிய பூமியும் புவியினில் புகுத்துவீரே
புண்ணியமும் புத்தொளியும் பூமியில் வளர்த்திடுவீரே
புதுவாழ்வும் புனித அன்பும் பூரணமாய் துலங்கச் செய்வீரே
புண்ணியனே பூவுலகெங்கும் புதுஒளி பரப்பிட உதிப்பீரே

பாலனே திவ்விய பாலனே! பாவத்திலிருந்து எம்மை
மீட்டு பாதுகாப்பீரே!
பாசத்தின் உறைவிடமாய் பாகுபாடின்றி ஆள்பவரே!
பாதுகாத்தருளும் பரமனே! எம் நாட்டைப் பாதுகாப்பீரே!
பாவத்திலிருந்து எம்மை மீட்டு பரலோகம் சேர்த்திடுவீரே!

எம்பிராணனே இயேசுபாலனே ஏற்பீரே எம் காணிக்கையை
எந்நாளும் நாம் உம் மக்களய்யா, எப்போதும்
எம்மை கைவிடாதேயும் ஐயா,
எங்கும், எதிலும், எப்போதும் நாம் உம்மிலே வாழ,
எந்நேரமும் எம்மைக் காத்து ஆளுமையா!

அருட்சகோ. டெலாறோஸ். அ.கா



## இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பாள்.







# இறைவார்த்தை வழிபாடு

## திருவருகைக்காலத்தின் 4வது ஞாயிறு (22.12.2019)

### பேதுரு

**வாசகவிளக்கம்:** திருவருகைக்காலத்தின் 4வது வாரத்தில் கால்பதிக்கும் திருஅவையின் இறைமக்களாகிய நமக்கு இன்றைய திருவழிபாட்டு வாசகங்கள் இரண்டு முக்கிய நோக்கங்களை எடுத்துரைக்கின்றது. ஒன்று கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்பது மற்றது எங்களை மீட்க வேண்டும் என்பது. இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா ஆகாசுக்கு கொடுத்த இறைவாக்கான “இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண் மகவை ஈன்றெடுப்பார். அக்குழந்தைக்கு அவள் இம்மானுவேல் என்று பெயரிடுவாள்” என்கிறார். நற்செய்தியில் மேற்-சொன்ன செய்தி நிறைவடைகின்றது. பாவிகளை மீட்க வேண்டும் என்பது கிறிஸ்து பிறப்பின் இரண்டாவது நோக்கமாகும். வானதூதர் மூலம் இயேசுவின் பிறப்புச் செய்தியை அறிந்த யோசேப்பும் மௌனமாக இருந்து இறைவனை நோக்கி செபிக்கின்றார். சாதாரண மனிதரைப் போல் இதைப் பற்றி விமர்சிக்கவோ கருத்து சொல்லவோ அவர் விரும்பவில்லை. அதனால்தாள் அவர் நீதிமான் என்று அழைக்கப்படுகின்றார். கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்று கூறும் நாம் பிறரோடு அவர்களின் வருத்தத்தில், துன்பத்தில் வறுமையில் இருக்கின்றோமா? என சிந்தித்து செயல்பட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : எசா 7:1-10**

இதோ கன்னிப்பெண் கருத்தாங்குவார்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவர் எழுந்தருள்வார் மாட்சிமிகு மன்னர் இவரே

**இரண்டாம் வாசகம் : உரோ 1:1-7**

தாவீதின் மரபினரான இயேசுகிறிஸ்து கடவுளின் மகன்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா, அல்லேலூயா! இதோ, கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல், அதாவது ‘கடவுள் நம்முடன் இருக்கிறார்’ எனப் பெயரிடுவர். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மத் 1:18-24**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்.

உலகம் முழுவதும் இயேசுவின் மீட்புச் செய்தியை பறைசாற்றி இயேசுவின் மீள்வருகைக்காக மக்களை ஆயத்த நிலையில் வைத்திருக்கத் தயார்-படுத்தும் திருஅவையின் தலைவரான திருத்தந்தை ஆயர்கள் அருட்பணியாளர், துறவிகள் அனை-வருக்கும் உமது அருளாசியை வழங்கி நற்செய்திப் பணியில் அவர்கள் ஆர்வமுடன் செயல்பட அவர்கள் மத்தியில் எழுந்தருளி வாரும்

மனுக்குலத்திற்கு மனித நேயத்தை கொண்டு வந்த கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு ஆயத்தமாகும் நாமும், நமது நாட்டு மக்களும் இன, மத, மொழி பேதங்களை மறந்து, மனிதநேயத்தைக் கருத்திற் கொண்டு பேதங்களை மறந்து ஒருதாயின் பிள்ளை-களாக வாழவும், கிறிஸ்து தந்த சமாதான வாழ்வை வாழ்ந்து காட்டவும் வேண்டிய வரங்களைத் தந்தருள எம் மத்தியில் எழுந்தருளி வாரும்

மரியன்னையின் கீழ்ப்படிதலினால் நாம் மீட்படைந்தோம். கடவுள் நம்மோடு இருக்கின்றார் என நம்பும் நாம் இயேசுவின் பிரசன்னத்தை நற்கருணையில் கண்டுணர்ந்து அவரின் மீட்பின் செய்தியை அனைவருக்கும் எடுத்துரைத்து நிறையு-ள்ள மனிதர்களை அன்புசெய்து பணிவிடை புரிந்து வாழ்ந்திடவும் வேண்டிய அருளைப் பொழிந்திட எழுந்தருளி வாரும்

## திருக்குடும்பத் திருவிழா (29.12.2019)

**வாசக விளக்கம்:** திருக்குடும்பத் திருவிழாவை சிறப்பிக்க இறையாலயத்தில் ஒன்றுகூடி வந்திருக்கும் திருஅவையின் இறைமக்களே! இயேசு வாழ்ந்த திருக்-குடும்பத்தை எம் கண்முன் நிறுத்தி சிந்திக்கவும், திருக்குடும்ப வாழ்வை பின்பற்றி எமது குடும்ப வாழ்வை அமைத்துக் கொள்ளவும், இன்று நாம் அழைக்கப்பட்டுள்ளோம். அன்னை மரியிடம் விளங்கிய இறைவார்த்தைக்கு கீழ்ப்படிதல், தேவையில் இருப்போருக்கு உதவுதல், யோசேப்பிடம் விளங்கிய கடின உழைப்பு, இயேசுவிடம் விளங்கிய கீழ்ப்படிதல், பெற்றோரை மதித்தல் போன்ற முக்கிய பண்புகள் நமக்குப் பாடமாக அமைந்துள்ளன. இவ்வாறான பண்புகள் நமது குடும்பங்களிடையே இல்லாத காரணத்தால் நமது குடும்பங்கள் நிலைகுலைந்து காணப்படுகின்றன. குடும்ப உறுப்பினர்கள் தமது கடமைகளை உணர்ந்து வாழ்ந்தால் மட்டுமே நமக்கு விமோட்சனம் உண்டு. சிந்திப்போம்.

**முதல் வாசகம் : சீ.ஞா 3:2-7,12-14**

“ஆண்டவருக்கு அஞ்சுகிறவன் தாய் தந்தையரை மதிக்கின்றான்”

**பதிலுரைப் பாடல் :**

ஆண்வருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடப்போர் பேறுபெற்றோர்.

**இரண்டாம் வாசகம் : கொலோ 3:12-21**

ஆண்டவருக்கு உகந்த குடும்ப வாழ்க்கை

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா, அல்லேலூயா! கிறிஸ்து அருளும் அமைதி உங்கள் உள்ளங்களை நெறிப்படுத்துவதால் கிறிஸ்து பற்றிய நற்செய்தி உங்களுக்குள் நிறைவாகக் குடிகொள்வதாக அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மத் 2:13-15, 19-23**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

திருக்குடும்ப பெருவிழாவைக் கொண்டாடும் இன்றைய நாளில் பெருங்குடும்பமான திருஅவைக்காக மன்றாடுவோம். திருக்குடும்பத்தை எம் குடும்பங்களுக்கு முன்மாதிரியாகத் தந்து வழிகாட்டும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவிகள், இறைமக்கள் அனைவரும் எப்பொழுதும் ஒரே குடும்பமாக இயங்க வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

குடும்ப உறவே சமூக உறவுக்கு அடித்தளம் என்பதை உணர்ந்தவர்களாக எமது நாட்டின் தலைவர்களும் மக்களும் எல்லாச் சமூக குடும்பங்களையும் சமமாக மதித்து நாட்டின் வளங்களையும், இயற்கையையும் சுற்றுக் சூழலையும் பாதுகாக்கவும் அனைவரும் ஒரே குடும்பமாக இணைந்து நாட்டின் வளர்ச்சிக்காகவும் உழைக்கவும் வேண்டிய வரங்களை அனைவருக்கும் தந்தருள வேண்டுமென்று...

திருக்குடும்பம் எமக்குத் தரும் புதுநம்பிக்கையை நமதாக்கிக் கொண்டு இன்னல்கள், துன்பங்கள், அவநம்பிக்கைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து இறைவல்லமையில் நம்பிக்கை கொண்டவர்களாக இயேசு மரி சூசை வாழ்ந்த திருக்குடும்பத்தை முன்மாதி-ரிகையாக கொண்டு வாழ வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# பெத்லகேம்



## பெத்லகேம் நகரில் இயேசுகிறிஸ்து பிறந்தார் என்னும் செய்தியை தருகிறது.

A

## அன்றும் இன்றும்

பெத்லகேம் நகரம் இயேசுகிறிஸ்து பிறந்த இடமாகும். இது பாலஸ்தீனத்தின் மேற்குக் கரை பகுதியில் உள்ளது. ஜெருசலேமிலிருந்து 8 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்நகரில் ஏறக்குறைய 30 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

பெத்லகேம் நகரின் எபிரேய பெயர் “Beitlehm” அல்லது Beyt lehem என்று வருகிறது. அரபியில் அதன் பொருள் புலால் வீடு (House of Bread) என்றும் சொல்லப்படுகிறது. பாலஸ்தீன மக்களின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலா மையமாகவும் இந்நகர் உள்ளது.

விவிலிய பழைய ஏற்பாட்டில் பெத்லகேம் தாவீது நகர் என்று அழைக்கப்படுகிறது. புதிய ஏற்பாடோ பெத்லகேம் நகரில் இயேசுகிறிஸ்து பிறந்தார் என்னும் செய்தியை தருகிறது. கிறிஸ்தவ சமூகங்களில் மிகப் பழமையான ஒரு குழுவினர் இந்நகரில் 20 நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்துள்ளனர். அண்மைக் காலத்தில் புலம்பெயர்தலின் விளைவாகக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெத்லகேமில் குறைந்து விட்டது. கி.பி 529ல். சமாரியர்கள் பெத்லகேமைச் சூரையாடினார்கள். அதை பினான்சிய மன்னர் முதலாம் ஜஸ்டின் மீண்டும் கட்டியெழுப்பினார். கி.பி 637ல் கலிபா உமர் இபன் அல்-கத்தாப் என்பவன் அதைக் கைப்பற்றினான். நகரிலிருந்த திருத்தலங்களுக்குச் செல்லும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட்டது. சிலுவைப் போர் வீரர்கள் பெத்லகேமை 1099ல் பிடித்து கோட்டைச் சுவர் எழுப்பினார்கள். மேலும் கிரேக்க வழிபாட்டு முறையை மாற்றி இலத்தீன் வழிபாட்டு முறை புகுத்தப்பட்டது. ஆனால் எகிப்துக்கும் சீரியாவுக்கும் அரசராக இருந்த “சலாதீன்” என்பவர் பெத்லகேமைக் கைப்பற்றி, இலத்தீன் முறைக் குருக்களை வெளியேற்றினர். மல்லுக் குலத்தவர் 1250ல் பெத்லகேமின் சுவர்களைத் தகர்த்தெறிந்தனர். அவை ஒட்டோ மான் மன்னர்கள் காலத்தில் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டன. முதலாம் உலகப்போரின் போது பிரிட்டீஷாக் பெத்லகேம் நகரை ஒட்டோமானியரிடமிருந்து பறித்தார்கள். பாலஸ்தீன் நாடு உருவாக்கப்படுவதற்கான ஐ.நா. திட்டத்தின்கீழ் 1947ல் பெத்லகேம் பன்னாட்டுத் தனிப் பகுதியாக மாற இருந்தது. ஆனால் யோர்தான் நாடு 1948ஆம் ஆண்டு அரபு - இஸ்ராயேல் போரின்போது பெத்லகேமை இணைத்துக் கொண்டது. 1967ஆம் ஆண்டு நிகழ்ந்த 6 நாள் போரில் இஸ்ரேல் நாடு...

தொடர்ச்சி 15ம் பக்கம்.

# கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் ஆன்மீக பத்திரிகைகள் இரண்டு 150 வருடங்களாக தொடர்ந்து வெளிவருவது உலக சாதனையாகும்!!



திரு. ஷிரான் மைத்திரி.

**எமது சகோதர பத்திரிகையான மெசன்ஜர் வாரப் பத்திரிகையின் 150வது வரலாற்று வெற்றி விழாவைக் கொண்டாட ஆயத்தமாக இருக்கும் இந்நேரத்தில் கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனரும் மெசன்ஜர், ஞானார்த்த பிரதீப்பய, லமா பிரதீப்பய (சிறுவர் பத்திரிகை) ஆசிரியரான அருட்பணி கமிலஸ் பர்னாந்து அடிகளாருடனான ஓர் நேர்காணல்.**

**ஆன்மீக பத்திரிகை இரண்டும் 150 வருடங்களாக தொடர்ந்து வெளிவருவது உயர்மறைமாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட அறிக்கை-யாகும்! இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

முதலில் கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர், துணை ஆயர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன். விஷேடமாக 150 வருடங்களாக இரண்டு பத்திரிகைகளையும் தொடர்ந்து வெளியிடுவதற்கு, இரண்டு பாத்திரிகையிலும் இருந்த ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், பொதுநிலை செயலாளர்கள், கத்தோலிக்க அச்சகத்தின் காரியாலய ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பத்திரிகைகள் 150 வருடங்களாக பலவிதமான சிக்கல்கள், சோர்வுகள், பிரச்சனைகளின் மத்தியிலும் தொடர்ந்து வெளிவருகின்றமை என்பது இறைவனிடமிருந்து கத்தோலிக்கத் திருச்சபை பெற்ற விசேட வரப்பிரசாதமாகும்.

ஆசியாவில் இலங்கையே இரண்டு ஆன்மீக பத்திரிகைகளை 150 வருடங்களாகத் தொடர்ந்து வெளியிட்ட சாதனையை எய்துள்ளது. நாட்டில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட பல்வேறு பாதகமான சூழ்நிலைகளில் மிகவும் கடினமான, எச்சரிக்கைகள் கத்தோலிக்க அச்சகத்திற்கு ஏற்பட்டதையும் மறுக்க முடியாது.

அதிமேதகு. ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகை பத்திரிகையின் இயக்குனராக பணிபுரிந்த காலத்தில் காகித தட்டுப்பாடு ஏற்பட்டது. கோட்டா முறையில் செய்தி அச்சிட தேவையானளவு கடதாசி கிடைக்காததால், பத்திரிகை வெளியிடுவதில் பாதிப்பு ஏற்பட்டது. இதையறிந்த சிலாப ஆயராக இருந்த மேதகு. எட்மண்ட் பீரிஸ் (அமதி) ஆண்டகை, சிலாப மறைமாவட்ட அச்சகத்திற்காக கொள்வனவு செய்திருந்த கடதாசியை கொழும்பு கத்தோலிக்க அச்சகத்திற்கு அனுப்பி வைத்துபெரும் உதவி புரிந்ததை இக்கணம் ஞாபகப்படுத்த வேண்டும். பல சம்பவங்களுக்கிடையில் இதுவும் ஒரு சம்பவமாகும்.

இவ்வருடம் சித்திரை 21ம் திகதி தற்கொலைத் தாக்குதலின் போதும் இடைநிறுத்தாவிட்டாலும், பத்திரி-கையை தேவையான இடங்களுக்கு கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் போன்றவை பார்த்துக்கொண்டிருக்கும் போதே சரிந்துக்கொண்டு சென்றதை மறக்கமுடியாது. பாதுகாப்பிற்காக தேவால்யங்கள் மூடியிருந்தமை, மக்களின் தொடர்பு இல்லாமை, போன்ற காரணங்களால் பத்திரிகை பகிர்ந்தளிக்க முடியாமை பாதிப்புக்குள்ளானது. மக்கள் தொடர்பு இன்மையால் விளம்பரங்களின் மூலம் வருமானம் பெற முடியவில்லை. இந்நிலையை அறிந்த கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் காரியால-யத்திற்கான செலவுகள், வெளியீடு செலவுகள் என முக்கியமான தேவைகளை குறைவின்றி பெற்றுத்தந்ததை இக்கணம் நன்றியோடு நினைவு கூர்கின்றேன். அதனால் கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் எதிர்காலத்தில் திடீர் தேவைகளுக்காக பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு செய்தல் மிக முக்கியமாகும். பலவிதமான நெருக்கடிகள், தடைகளின்போது பத்திரிகை அச்சிடல், விற்பனை செய்வதற்கு தடை ஏற்பட்டாலும் அதற்கீடாக வாசகர்களின் தேவையைப் பெருக்கி, விற்பனையை அதிகரித்து இலாபம் பெற முடியும்.

**மறைமாவட்டத்தினால் அச்சிடப்படும் பத்திரிகை என்றாலும் தேசிய மட்டத்திற்கும் தகுதியானது என காண முடியும். அது பற்றிய ஏதாவது சொல்ல முடியுமானால்....**

நாம் மூன்று மொழிகளிலும் செய்தித்தாள் வெளியிடுகிறோம். தேசிய காரியாலய, பொதுநிலையினர் தூதுச் சேவை, ஆயர் இல்ல அறிவித்தல்கள், நியமனங்கள் போன்ற அனைத்தும் பிரசுரமாகிறது. இனப்பிரச்சனைக-ளின், நெருக்கடிகளின் காலங்களில் திருச்சபையின் கருத்-துக்கள், திருத்தந்தை பற்றிய செய்திகள், உலக நாட்டு திருச்சபைகள் பற்றி எந்நேரமும் மக்களை விழிப்புறச் செய்சிறோம். இந்த நான்கு ஆன்மீக பத்திரிகைகளை கொழும்பு உயர்மறைமாவட்டம் வெளியிட்டாலும் இவை தேசிய பத்திரிகையாகும். காரணம் ஏனைய மறைமாவட்ட செய்திகளும் வெளியிடப்படுகின்றன. அதனால் கத்தோ-லிக்க திருச்சபையின் தேசிய பத்திரிகையாகும்.

**ஒருபோதும் இல்லாதவாறு இன்று இந்நாட்டு கத்தோலிக்க எழுத்தாளர்கள் பற்றி கதைக்கப்படுகிறது. அவர்களை ஒன்று சேர்க்க தொடர்ந்து பலவிதமான வேலைத்திட்டங்கள் நடைபெறுகிறது. அதுபற்றி ஏதாவது சொல்லுங்கள்.**

நான்கு வருடங்களுக்கு முன்பு ஞானார்த்த பிரதீப்பய செய்தி பத்திரிகையின் ஆசிரியராக பொறுப்பேற்ற கணம் தொடக்கம் கத்தோலிக்க எழுத்தாளர்களை எனது காரியாலயத்தில் திரட்டும் வேலைத்திட்டத்தை 6 மாதத்திற்கு முதல் ஆரம்பித்தேன். பின்பு எமது வேலைத்-திட்டங்கள் பற்றி கலந்துரையாடினோம். அவ்வாறு சந்தித்தவர்களை ஞானார்த்த பிரதீப்பயவில் குறிப்பு புத்தகம் வைத்து சந்திப்புகளை பதிவு செய்ததினால் முக்கிய எழுத்தாளர்கள் இனம் காணப்பட்டனர். அவர்கள் கத்தோலிக்க எழுத்தாளர்களின் முன்னேற்றத்திற்காக வேலைத்திட்டம் ஒன்றை அமைக்குமாறு கேட்டுக்கொண்-டார்கள். இக்கருத்துக்களைத் தொகுத்து எமது கொழும்பு பேராயரிடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தேன். அவர் எழுத்தாளர்களைச் சந்திக்க சந்தர்ப்பம் தந்தார். எழுத்தாளர் குழுவில் திரு. சிரான் மைத்திரி, திரு. லெனாட் குரே, திரு. மெக்ஷிமஸ் ரோய், திரு. கலிஸ்டஸ் ஜயமான்ன, திரு. டிக்சன் அன்டனி, திரு. மொறிஸ் பொல்லேகல உள்ளிட்ட குழு ஒன்றுகூடினர். இச்சந்திப்பின் நிறைவில் பல கத்தோலிக்க எழுத்தாளர்களின் ஆரம்பத்தளம் ஞானார்த்த பிரதீப்பய என்பதால் 150 வருடங்கள் நிறைவை முன்னிட்டு அவர்களை ஒன்று திரட்டுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆரம்ப ஒன்று கூடல், பொரள்ளை புனித யோசவ்வாஸ் இறையியல் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கையின் பல திசைகளிலுமிருந்து 250க்கும் அதிகமான எழுத்தா-ளர்கள் திரண்டு வந்தனர். அன்று எழுத்தாளர் சங்கம் உருவாகியதுடன் அனைவரும் இணைந்து எழுத்தாளர்-களுக்காக சேவையாற்ற முடிந்தது. அன்று கத்தோலிக்க எழுத்தாளர் அமைப்பை முன்கொண்டு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. வருடாந்த சுற்றுலா.
2. தம்மால் எழுதி வெளியிட முடியாத 42 எழுத்தாளர்களின் முதல் புத்தகங்களை வெளியிடுதல்.
3. பல வருடங்களுக்குப் பின்பு கத்தோலிக்க புத்தக வெளியீட்டு விழா ‘அச்சக வாரம்’ ஆரம்பித்தல்.
4. ஞானார்த்த பிதீப்பய வாசகர்களின் பாராட்டுவிழாவில் கிறிஸ்தவ மத அலுவலக ஆணைக்குழு திணைக்க-ளத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.
5. வருடாந்த யாத்திரை, ஒழுங்கமைப்பதன் மூலம் எழுத்தாளர்களின் அறிவு செறிவை அதிகரித்தல் உட்பட மேலும் பல வேலைத்திட்டங்கள் குறுகிய காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

இவை தொடர்ந்து நடைபெற வேண்டுமென கத்தோலிக்கத் திருச்சபை வாழ்த்துகிறது. இவ்வாறான வேலைத்திட்டத்தை ஆங்கில எழுத்தாளர்களுக்கும் அமைக்க உத்தேசித்துள்ளதுடன் பாடசாலை மட்டத்திலும் எழுத்தாளர்களை உருவாக்க பாடசாலை அதிபர்களின் உதவியையும் பெற்றுக்கொள்ளப்படும்.

**மெசன்ஜர் செயதித்தாள் தேசிய ரீதியில் நாடு முழுவதும் விற்பனை செய்யும் பத்திரிகை என்ற வகையில் அதன் விஷேசித்த தன்மை என்ன?**

ஞானார்த்த பிரதீப்பய அதிகளவான எழுத்தாளர்கள் இருந்தாலும் மெசன்ஜர் பத்திரிகைக்கு காலத்துக்கேற்ற, இறையிலாளர்கள், ஆக்கங்கள் எழுதும் எழுத்தாளர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். அதனால் எதிர்கால-த்தில் அதற்கான செயல்பாட்டை பேராயருடன் இணைந்து முன்னெடுக்க எதிர்பார்க்கின்றோம். அதற்கு கத்தோலிக்க அதிபர்கள், இயக்குனர்களின் ஒருமைப்பாடு அவசியம். அதேபோல் விஷேடமாக குறிப்பிட வேண்டிய ஒன்று, மிகவும் பிரசித்தி வாய்ந்த அருட்தந்தையர்கள் பலர் எழுத்தாளர்களாயிருந்ததுடன் அவர்களின் சேவையை மீண்டும் மீண்டும் பாராட்டுகிறேன். கத்தோலிக்க அச்சக-த்தில் மெசன்ஜர் வாராந்த பத்திரிகையை தொடர்ந்து வெளியிட முடியுமானதால், பத்திரிகை அச்சிடுவோர் விற்பனை செய்போர் சகல துறை இயக்குனர் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். இத்துடன் இன்னுமொரு காரணத்தையும் கூற விரும்புகிறேன், அதாவது பத்திரிகையின் மூலம் தம்மை பிரபல்ய-மாக்க முயலும் பலர், பத்திரிகையை விற்பனை செய்ய முயலுவதில்லை.

**கத்தோலிக்க அச்சகத்தின் தற்போதைய நிலை...**

பல வருடங்களாக பாவித்த கணணி கருவிகள் மாற்றம் செய்து நவீனமாக்கியதன் பிரதிபலனாக அனைத்து விற்பனைகளும் ஒழுங்காகவும், பொறுப்புக்களை சரிவர செய்ய முடியுமாகியது. அத்துடன் பத்திரிகைக்கான கடதாசி தொகையாக பெற்று களஞ்சியப்படுத்தி பாவிக்க உத்தேசித்துள்ளோம். மெசன்ஜர் 150வது விழாவின் பிரதான காரியாலயம், எழுத்தாளர் மன்ற காரியாலயம், கணணி தளம் என அனைத்தும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

**ஆங்கில எழுத்தாளர்களின் குறைப்பாடு பற்றி பேசப்படுகிறது. அதுபற்றி....**

இன்றைய நவீன தொழில் நுட்ப யுகத்தில் தொலைக்காட்சி, பத்திரிகைகளின் பாவனை குறைந்து-ள்ளதாக கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் பத்திரிகை

வாசிப்பதில், எவ்வித குறைப்பாடும் இல்லை. ஆயினும் சில எழுத்தாளர்களின் கட்டுரைகளைப் பற்றி குறை கூறினாலும், குறை கூறுபவர்களால் ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் ஆக்கங்கள் எழுத முடியாது. அனைத்தும் 'திடீர்' என ஏற்பட்டுள்ள சமூகத்தில், திடீர் பிரதிபலன் எதிர்பார்க்கும் சமூகத்தினர், ஆக்கம் எழுதுவதற்கான மனநிலை, புத்தகம் வாசித்தல், மொழித்திறன் போன்றவற்றில் பின்தங்கியே நிகழ்கால சமூகத்தினர் வாழ்கின்றனர். அதனால் நாம் விஷே-சமாக இளம் சந்ததியினரை அழைக்கிறோம். இரண்டு பத்திரிகையின் எழுத்தாளர்களாக 50 வயதைக் கடந்தவர்-கள் இருப்பதால், சில காலமாக எழுத்தாளர்களின் பற்றாக்குறையும் தோன்றியுள்ளது.

நாம், பத்திரிகை துறையில் இயல்பாக இருக்கும் கலை அம்சங்கள் வெளிப்படவேண்டும் என விரும்புகிறோம். அத்துடன் கருப்பொருளை மாத்திரம் கொள்ளாமல் அதற்கான தெளிவான அறிவுபூர்வமான பின்னணியும் இருத்தல் அவசியம். ஆங்கிலமொழி தெரிந்திருத்தல் மாத்திரம் எழுத்தாளர்களின் தகுதி அல்ல, அதைவிட உயர்ந்த அறிவுத் தெளிவு, அர்ப்பணம் இருத்தல் அவசியம். என்னோடு இணைந்து மெசன்ஜர் பத்திரிகையைத் தொடர்ந்து வெளியிட உதவி புரியும் மெசன்ஜர் எழுத்தாளர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதற்கான காரணம், அவர்கள் ஒவ்வொரு வாரத்திலும் புதன்கிழமை மாலை 3.00 மணியாகும் போது பத்திரிகையை நிறைவு செய்து அச்சிட கொடுப்பதில் அவர்களின் அறிவுத் தெளிவும், அர்ப்பணமும் வெளிப்படுகிறது. ஒரு நிறுவனத்தில் மாதத்திற்கு, வாரத்திற்கு பத்திரிகை வெளியிடுவதன் அனுபவம் உங்களுக்குத் தெரியும். அதன் சிக்கலான கடின நிலையையும் அறிவீர்கள். காரியாலய ஊழியர்கள் ஒவ்வொரு வாரமும் பத்திரிகையை நேரத்திற்கு அச்சிட உதவுகிறார்கள். அவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இச்சந்தர்ப்பத்தில் 50 வயதை தாண்டி 30 - 35 வருடங்களாக வேலை செய்பவர்களை இக்கணம் நினைவு கூறுகின்றேன்.

**அருட்தந்தையே, தனிப்பட்ட முறையில் ஒரு கேள்வி. நீங்கள், குருமடம், அதிபர், பங்குத் தந்தையாக இருந்ததுடன், நிகழ்காலத்தில் ஆசியா ஆயர் மன்றத்தின் சேவைகளுக்கு மத்தியிலும், கட்டுரை, இசை நிகழ்வுகளிலும் இணைந்து, 3 பத்திரிகையின் இயக்குனராகவும் பணியாற்றுவது பற்றி.....**

கத்தோலிக்க அருட்தந்தை என்ற வகையில் மறைமாவட்ட ஆயரினால் அளிக்கப்படும் பொறுப்புக்கள் இறைவனின் நாமத்தை மகிமைப்படுத்த ஆற்றும் சேவைகளாகும். திருச்சபை, அருட்தந்தையாக முன்பும் அருட்தந்தையான பின்பும் பயிற்சியளிப்பதற்கான காரணம், திருச்சபையின் சேவைகளை நிறைவேற்றுவதற்கேயன்றி தனிப்பட்ட காரணத்திற்காக அல்ல. அதனால் திருச்சபையின் பொறுப்புக்களை ஆசையுடன் நிறைவேற்றுவதே எனது பொறுப்பாகும். அத்துடன் 4 வாரங்களும் பத்திரிகை வெளியிட காரியாலய ஊழியர்கள் செய்யும் பொறுப்பு மிக முக்கியமாகிறது. அவர்களின் உதவியுடனே என்னால் இந்நிறுவனத்தில் சேவையாற்ற முடிகிறது. அதனால், இரவுசேவை ஊழியர்களுக்கான வசதிகளையும் மேம்படுத்-தியுள்ளோம்.

**அருட்தந்தையே, இறுதியாக இந்த நிறைவு விழாவைப் பற்றி ஏதேனும் சொல்வதாயின்...**

கத்தோலிக்க அச்சகத்தில் உள்ள அனைத்து துறைகளிலும் முன்னேற வழிகாட்டிய கொழும்பு பேராயர், துணை ஆயர்கள், அனைத்து துறவற குருக்கள், அருட் சகோதரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இந்த நிறைவு விழாவை We remember - We celebrate என்ற தலைப்பின் கீழ், எமது அச்சக வரலாற்றை ஞாபகப்படுத்தி, கடந்த காலத்தில் நடந்த அசம்பாவிதத்தில் பாதிக்கப்பட்ட சகோதர சகோதரிகளை ஞாபகப்படுத்துவதுடன் இன்றிலி-ருந்து முன்னோக்கி எமது பார்வையை செலுத்த வேலைத்-திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

மார்கழி 16ம் திகதி மாலை 6.00 மணிக்கு கொழும்பு பேராயரின் தலைமையில் ஆயர் இல்ல கேட்போர் கூடத்தில் (Auditorium) நடைபெறும் இந்நிகழ்வை ஒழுங்கமைக்க உதவிபுரிந்த அசினி அல்பே, பிரன்சிஸ் அல்மேதா, அஜித் மெண்டிஸ், சாரங்க மெண்டிஸ், டிஹான் செனவிரத்ன, சிரான் மைத்திரி, ஷமிதா குருப்பு, ஏ.வீரப்பெரும, சுனந்தா ஸ்தெம்பு, சாலிக்கா ஜயமான்ன, நொயிலின் நிக்கலஸ், அன்டன் பாரிஸ், லலித் பெரேரா, மற்றும் அச்சக மேலாண்மை கணக்காளர் உட்பட அனைவரையும் நினைவு கூருகிறேன்.




# மெசஞ்சர் பத்திரிகையின் 150வது ஆண்டு நினைவலைகள் சில!

**ஆக்கம் : ஓய்வுபெற்ற பேராயர். அதிமேதகு. ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை**

எங்கள் கத்தோலிக்க வாராந்த இதழான "மெசஞ்சர்" தனது 150வது ஆண்டை எட்டியுள்ளது இது உண்மை-யில் மாபெரும் விடயமாகும். சாதனையாகும். எங்கள் கத்தோலிக்க ஆங்கில பத்திரிகைகள் ஒன்று அல்லது இரண்டு உள்ளன. ஆனால் கத்தோலிக்க சிங்கள பத்திரிகைகளில் "ஞானார்ந்த பிரதீபய" நீண்ட காலமாக வெளியிடப்படும் பத்திரிகை என்ற பெருமையை கொண்டுள்ளமை இந்நேரத்தில் குறிப்பிடத்தக்க சிறந்த விடயமாகும்.

"மெசஞ்சர்" முதன் முதலில் 1869ம் ஆண்டு வெளியிடப்பட்டது. "மெசஞ்சர்" மற்றும் "ஞானார்ந்த பிரதீபயா" என்ற இவ்விருப் பத்திரிகைகளும் தொடக்கத்தில் கத்தோலிக்க வர்த்தகர்களால் தொடங்கப்பட்டிருந்த ஒரு தனியார் அச்சகத்திலேயே அச்சிடப்பட்டு வெளியிடப்-பட்டன. ஏனெனில் "லெட்டர் பிரஸ்" (Letter Press) என்ற பிரபல்யமான அச்சியந்திரம் அவர்களிடமே காணப்ப-ட்டது. 1870ஆம் ஆண்டு மாசி மாதம், மேற்குறிப்பிட்ட அச்சகத்தின் செயற்பாடுகள், கத்தோலிக்க ஆதரவற்றவர்கள் இல்லத்திற்கு இடமாற்றப்பட்டு "த சிலோன் கெத்தலிக் ஓர்வன் பிரஸ்" என பெயர் மாற்றப்பட்டது. அங்கிருந்த ஆதரவற்றப் பிள்ளைகளும், இணையோரும் அச்சக வேலைகளுக்காக பயிற்றுவிக்கப்பட்டனர். மேலும் 1870ஆம் ஆண்டில் மேற்குறிக்கப்பட்ட அச்சகத்தின் முழுமையான உரிமை கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயத்திற்கு மாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1896ஆம் ஆண்டில் மறுசீரமைப்பின் நிமித்தம், இந்த அச்சகத்தின் பெயர் "செய்ன்ட் லூசியாஸ் பிரஸ்" (At. Lucia's Press) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அச்சகத்தின் முழுமையான நிர்வாகம் கத்தோலிக்க ஆதரவற்றவர்கள் இல்லத்தாரிடமிருந்து கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயரின் கீழ் கொண்டு வரப்பட்டது. பின் 1901ஆம் ஆண்டு இந்த அச்சகமானது பொரள்ளையில் அமைந்து பேராயர் இல்ல அருகாமைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு "த கொழும்போ கெத்தலிக் பிரஸ்" (The Colombo Catholic Press) என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இதே காலத்தில் யாழ் மறைமாவட்டத்தின் ஆதரவின் கீழ், யாழ்ப்பாணத்தில் ஆங்கில கத்தோலிக்க வார இதழ் ஒன்றும் (த கெத்தலிக் கார்டியன் - The Catholic Guardian), தமிழ் வார இதழ் ஒன்றும் (சத்திய வேத பாதுகாவலன்) அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு வந்தது. இந்நிலையில் சில காலம் கழித்தபோது, இலங்கை திருநாட்டின் ஆயர்கள் அனைவரும் ஒன்றாக சந்திக்க நேர்ந்த வேளை, இரண்டு கத்தோலிக்க ஆங்கில பத்திரிகைகள் வெளியிடுவதைவிட, சிறப்பான ஒரே ஒரு ஆங்கில பத்திரிகையை வெளியிடுவது நலம் என முடிவு செய்தனர். அத்தோடு இலங்கைத் திருநாட்டில் காணப்படும் மொழிகளுக்கு அமைய மூன்று வாரங்களிற்கு ஒருமுறை ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் கத்தோலிக்கப் பத்திரிகைகள் வெளியிட தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியிலான கத்தோலிக்க பத்திரிகைகள், கொழும்பு கத்தோலிக்க அச்சகத்திலும், தமிழ் மொழியிலான கத்தோலிக்க பத்திரிகை யாழ் புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்திலும் அச்சிடப்பட்டு விற்பனைகளுக்காக புகையிரதம் மூலம் கொழும்பு மற்றும் யாழ் நகரங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது.

கொழும்பு கத்தோலிக்க அச்சகம் தொடக்கத்தில் ஒரு மாடி கட்டிடமாகவும் மருதானை மற்றும் பொரள்ளை வீதியிலிருந்து சற்று தொலையிலிருந்து பேராயர் இல்லமும் அதே வீதியில் அமைந்திருந்ததோடு அதன் ஒரு பக்கத்தில் திரு இருதய ஆண்டவர் சிற்றாலயம் அமைந்திருந்தது. சிற்றாலயத்திற்கு தெற்குப் பகுதியில் ஒரு கால்பந்து மைதானத்திற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

கொழும்பு கத்தோலிக்க அச்சகத்துடனான எனது முதல் இணைப்பு, நான் புனித ஜோசப் கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்தபோது "ஞானார்ந்த பிரதீபய" என்ற



The "Messenger" sponsored show of the film "The Bible" in aid of Mutwal's "Mission to the Poorest" at the Rio Cinema last year.
A "Messenger" street-seller meets a fair reader.

பத்திரிகைக்கு வருடாந்த கட்டணம் செலுத்த சென்ற வேளையில் உருவானது. அந்நேரம் புனித ஜோசப் கல்லூரி, தற்காலிகமாக தற்போது அக்குவைனாஸ் கல்லூரி, அமைந்திருக்கும் இடத்தில் முதலில் காணப்பட்ட புனித பேர்னாட் குருமட வளாகத்தில் அமைந்திருந்தது. இந்-நேரத்தில் அச்சகக் கட்டிடம் தற்போதைய அச்சேற்றல் இயந்திர அறைக்கு அருகில் ஒரு பெரிய மண்டபமாக காணப்பட்டது.

சிறந்த எழுத்தாளர் ஜே.பி.டி பொன்சேகா அவர்கள் இப்பத்திரிகைக்கு பெரும் பங்களித்தவர். அவர் எவ்வாறு தான் ஆசிரியர் பணியாற்றி வந்த, புனித ஜோசப் கல்லூரியிலிருந்து ஒரு "ரிக்ஷா" மூலம் எவ்வாறு இப்பத்திரிகைகளுக்கு உதவ வந்தார் என எனக்கு நினைவிருக்கின்றது. அவர் ரிக்ஷாவில் ஏறும் போது "குலிவர் இன் லிலிபுட்" (Gulliver in Lilliput) போல இருத்தது ஜே.பி.அவர்களின் "த சர்வை வல் ஆ.்.ப் த பிட்டெஸ்ட் (The Surival of the Fittest), "எபிஸ்டல் டு த ஆல்டர் சர்வஸ்" (Epistle to the Altar Servers) போன்ற தொடர் கட்டுரைகள் மிகவும் சுவையானவை. இந்த காலத்திலிருந்த பதிவாளர் அருட்பணி. ஜே.பி கிரகோரி அவர்களையும் எனக்கு சற்று நினைவிருக்கின்றது.

சிறிது காலத்தின் பின், அதாவது 1950ஆம் ஆண்டு நான், புனித அலோசியஸ் குருமடத்தில் இணைந்தது முதல் இந்த அச்சகத்துடன் நெருங்கியத் தொடர்புக் கொண்டேன். 1951ஆம் ஆண்டு முதன் முறையாக புனித அலோஷியஸ் சிறிய குருமடம், "அலோஷியன் ஹெரால்ட்" (Aloysian Herald) என்ற ஒரு பத்திரிகையை வெளியிட்டது. இதன் விளைவாக இப்பத்திரிகை தொடர்பான பணிகளுக்கு அச்சகத்திற்கு செல்ல நேர்ந்த வேளையிலேயே இந்த அச்சகத்துடனான எனது உறவு பலப்பட்டது இக்காலத்தில் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த அருட்பணி. டோச்சின் அ.ம.தி அவர்கள் பத்திரிகை மேலாளராக இருந்தார். இவர் மிகுவும் கடுமையானவர். இதனால் நாங்கள் அவருடன் நேரடியாக எந்த தொடர்பும் கொண்டிருக்கவில்லை.

தொடர்ச்சி அடுத்த இதழில்





# உலக நாடுகளில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

## கிறிஸ்மஸ் பண்டிகையானது ஒவ்வொரு நாட்டிலும் சிற்சில வேறுபாடுகளுடன் கொண்டாடப்படுகின்றது

## வியத்தகு அடையாளமான கிறிஸ்மஸ் குடில் வாழும் நற்செய்தி!

### கிறிஸ்மஸ் குடிலைப் பற்றி, திருத்தந்தையின் திருத்தூது மடல்

டிசம்பர் 1, சிறப்பிக்கப்பட்ட திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கிறிஸ்மஸ் குடிலின் பொருளை விளக்கும் திருத்தூது மடல் ஒன்றை, “வியத்தகு அடையாளம்“ என்று தலைப்பில் வெளியிட்டுள்ளார்.

அசிசி நகர் புனித பிரான்சிஸ் அவர்கள், 1223ம் ஆண்டு, இத்தாலியின் கிரேச்சோ (Greccio) நகரில் கிறிஸ்து பிறப்பு குடிலை முதன்முதலாக உருவாக்கிய இடத்தைச் சென்று பார்வையிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், குடிலின் பொருள் மற்றும் முக்கியத்துவம் குறித்து திருத்தூது மடல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.



கடவுள் குழந்தையானதை எடுத்துரைக்கும் குடில், இடையர்களைப்போல் நாமும் சீடர்களாகவும், நற்செய்தி அறிவிப்பாளர்களாகவும் மாறவேண்டும் என்ற அழைப்பை விடுப்பதாக உள்ளது என்று இம்மடலில் கூறும் திருத்தந்தை. எளிமையைக் கண்டுகொள்ள குடிலில் வைக்கப்பட்டிருக்கும் வைக்கோல் தொட்டி உதவுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

“வியத்தகு அடையாளம்“ என்று தலைப்பில், வெளியிட்டுள்ள இம்மடல், கிறிஸ்மஸ் குடிலை “வாழும் நற்செய்தி“ என்று அழைக்கிறது.

நற்செய்தியில் கூறப்பட்டுள்ள இயேசுவின் பிறப்பை நம் கண்முன் கொணரும் குடில், நம் இதயங்களைத் தொட்டு, நாம் மீட்பு வரலாற்றில் காலடி எடுத்துவைக்க உதவுகிறது என்று இம்மடலில் விவரித்துள்ளார்

கிறிஸ்மஸ் குடிலில் காணப்படும் அன்னை மரியா, யோசேப்பு, இடையர்கள் ஆகியோரின் பங்களிப்பு, அவர்கள் வழியே நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் ஆகியவை குறித்தும், அவர்கள், இம்மடலில் விளக்கிக் கூறியுள்ளார்.



### பிரான்ஸ்



கிறிஸ்மஸ் தினத்தன்று குடும்பத் தலைவன் ஒரு விளக்கை ஏற்றி அதை அணைத்து விடுவார். அந்த விளக்கை மறுபடியும் அந்த வீட்டின் மூத்த மகன் ஏற்றி வைப்பான். அந்த விளக்கு ஜனவரி 6ம் திகதி வரை அணைந்து விடாமல் பாதுகாக்கப்படும். அந்நாட்டில் கிறிஸ்மஸ் தாத்தா வீட்டின் புகை போக்கி வழியாக இனிப்புகளையும், பரிசுப் பொருட்களையும் போட்டுச் செல்வதாக நம்புகின்றனர்.



### அவுஸ்திரேலியா

தலை நகராகிய சிட்னிக்கு அருகிலுள்ள போண்டி என்ற கடற்கரைக்குச் சென்று கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடி மகிழ்கின்றனர். இப்பகுதியிலுள்ள மக்கள் இந்நாளில் வான்கோழி பொரியல் செய்து சாப்பிடுவார்கள்.



### ஹாலந்து

டிசம்பர் 6ம் திகதி கிறிஸ்மஸ் கொண்டாடுகின்றனர். இந்நாளில் புனித நிக்கலஸ் எனப்படும் கிறிஸ்மஸ் தாத்தா (பிஷப்) ஆயர் உடையில் குதிரை மேல் அமர்ந்து வந்து பரிசுகளை வழங்குகின்றார்.

### சீனா



சீனாவில் பட்டுத்துணியிலான பல்லாக்கில் இயேசுவின் உருவத்தை வைத்து ஊர் வலம் செல்கின்றனர். வீதியெல்லாம் தோரணங்களை கட்டியிருப்பர். இந்நாளில் பாம்பு ரோஸ்ட், அரிசி பலவு சோறு மற்றும் கேக் வகைகளை உண்கின்றனர்.



### ஜெர்மனி

கிறிஸ்மஸ் கரோல் எனப்படும் புகழ் பெற்ற பாடல்களைப் பாடுகின்றனர். உலகம் முழுவதும் இன்று அமைக்கப்படும் கிறிஸ்மஸ் மரம் இந்நாட்டிலிருந்து தோன்றியது. கிறிஸ்மஸ் விருந்தில் வாத்து இறைச்சியும் கொக்கு கறியும் உண்கின்றனர்.

### சுவீடன்



இந்நாட்டில் சிறிய வயதுடைய பெண் பிள்ளைகளுக்கு வெண்மை நிற உடைகள் உடுத்தி தேவதை போல் அலங்கரித்து, அவர்கள் தலையில் ஒரு கிரீடம் சூட்டி அதைச் சுற்றிலும் மெழுகுவர்த்திகளை ஏற்றி வைப்பார்கள். இந்த அலங்காரத்துடன் இச்சிறுமி எல்லோருக்கும் உணவு வழங்குவாள். இதன்மூலம் இயேசுவே வந்து ஆசீர்வாதம் செய்வதாகக் கருதுகின்றனர். இந்நாட்டில் கிறிஸ்மஸ் தாத்தா புனித வாலஸ் என்று அழைக்கப்படுகின்றார். இவர் சிகப்பு நிற உடை அணிந்து குழந்தைகளுக்கு பரிசு வழங்குவார்.



### இத்தாலி

கிறிஸ்மஸ் அன்று குடும்பத்தார் எல்லோரும் ஓரிடத்தில் கூடுவர். அனைவர் மத்தியிலும் ஒரு கூடை வைக்கப்பட்டிருக்கும். இந்த கூடையில் நிறைய பொட்டலங்கள் இருக்கும். இப்பொட்டலத்தில் ஏதாவது ஒரு பரிசுப்பொருள் இருக்கும். ரெடி என்று சொன்னதும் ஒவ்வொருவரும் ஒரு பொட்டலத்தை விரைந்து சென்று எடுப்பர். அந்த பொட்டலத்தில் இருக்கும் பரிசு பொருள்களை வைத்து அந்த ஆண்டு முழுவதும், பலன் கிடைக்கும் என நம்புகின்றனர்.

### ஸ்பெயின்

கிறிஸ்மஸ் தினத்தன்று வீடுகளில் வாசல் ஜன்னல்களில் மெழுகுத் திரிகளை ஏற்றி வைப்பர். ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வர்.



### மெக்சிக்கோ

இந்நாட்டில் கிறிஸ்மஸ் தினத்தன்று இந்தியாவில் நடைபெறுவது போல் உறியபடி நடக்கும். மேலே கவசம் கட்டியிருப்பார்கள். இக்கவசத்தை உடைத்ததும், இதிலிருந்து வகைவகையான இனிப்புகள் கீழே விழும். அனைவரும் அதை எடுத்து சாப்பிட்டு மகிழ்கின்றார்கள்.


### அமெரிக்கா

இந்நாட்டில் கிறிஸ்மஸ் வெகு விமரிசையாக கொண்டாடப்படும். குடில்களும், கிறிஸ்மஸ் மரங்களும், கிறிஸ்மஸ் தாத்தாக்களும் மிகவும் பிரபலமாகும். கிறிஸ்மஸ் தினத்தன்று புறாக்கறி மற்றும் இறைச்சி வகைகளை உண்டு மகிழ்கின்றார்கள்.





# விடுதலையும் விடியலும் பெருமகிழ்வும் கொண்டுவந்த கிறிஸ்து இயேசுவின் பிறப்பு விழா



திரு. அம்புறோஸ் பீற்றர்





யோசேப்பு தன் மனைவியுடன் வரிசெலுத்த தன் சொந்த ஊருக்குச் சென்றது மறக்க முடியாத உண்மை. அங்கு சொந்த ஊர் மக்கள் பல இடங்களில் இருந்து மக்கள் நெருக்கடியில் தங்க இடம் இல்லாமல் போனதும் குகையின் வெளிப்பகுதி தங்குவதற்கு சாதகமாக இல்லாததினாலும் உட்புறத்தில் விலங்குகளுடன் தங்கும் நிலை ஏற்பட்டது.

இடையர்கள் மதிக்கப்படாத ஒரு சமுதாயம். கடவுளே இஸ்ராயேலின் நல்ல ஆயன் பேதங்களை வகுப்புவாதங்களை கடந்து அவர்களுக்கு நற்செய்தியை வெளிப்படுத்தினார். பழைய ஏற்பாட்டில் கடவுளின் மாட்சி திருக்கோவிலில் எப்படி விளங்கியதோ அவ்வாறே பெத்லேகேமின் மீதும் சிறு குழந்தையின் மீதும் விளங்கியது. எதிர்பார்ப்பின் காலம் முடிந்து பெருமகிழ்ச்சியின் காலம் தொடங்கியது.

கடவுள் இல்லை, இல்லவே இல்லை அவரைப் போதிப்பவன் காட்டுமிராண்டி என்பவர் ஒருபக்கம் என் இருண்ட வாழ்விற்கு விடியல் தரும் கடவுள் எங்கே என்பவர் ஒரு பக்கம், கடவுளே மீட்பர் என்று விசுவசித்து அவரது வருகைக்காக காத்து ஏங்கிக் கொண்டிருப்பவர் மறுபக்கம். இப்படிப்பட்ட அனைவரின் ஏக்கத்திற்கும் வினாக்களுக்கும் விடையாக அமைவது இந்தப் பாலகனின் பிறப்பு, கடவுள் உலகத்தில் பிறந்ததன் மூலம் வரலாற்றைப் பிரிக்கும் வரலாற்று நாயகனாக திகழ்கின்றார். மீட்பின் வரலாறு உலக வரலாற்றின் ஒரு பகுதியாக விளங்குகின்றது. சரியாக சொல்ல வேண்டுமெனில் கடவுள் வரலாற்று நிகழ்ச்சிகளை தனது மீட்பின் வரலாற்றுக்குப் பயன்படுத்துகிறார். மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது உலக வரலாறு. யோசேப்பும் நிறைமாத கர்ப்பிணி மரியாவும் செல்வதும் தம் தலைமகனைப் பெற்றெடுப்பதும் மீட்பின் வரலாறு.

மீட்பின் வரலாறு தீர்க்கதரிசனத்தின் படி தாவீதின் வழி மரபிலே மீட்பர் பிறக்க வேண்டும். தாவீதின் ஊரிலே பிறக்க வேண்டும். அதே நேரத்தில் மீட்பர் நசரேன் என்று அழைக்கப்படவும் வேண்டும். யோசேப்பு தாவீது வம்சத்தை சார்ந்தவராக இருந்தாலும், நாசரேத்தில் வசிப்பவர் எனவே கடவுள் அவர்கள் வரலாற்று நிகழ்வை பயன்படுத்தி பெத்லகேமுக்கு வழிநடத்தி செல்கிறார். அங்கே நிறைமாத கர்ப்பிணி மரியா மீட்பரை பெற்றெடுகிறார். பெத்லகேம் என்ற சொல்லுக்கு உணவின் இல்லம் என்று பொருள்.

தாவீது எருசலேமை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார். அவரது காலம் இஸ்ராயேல் வரலாற்றில் பொற்காலம் என அழைக்கப்பட்டது. அமைதி நிலவியது. எருசலேம் என்ற சொல்லுக்கு அமைதியின் நகரம் என்று பொருள். ஏனெனில் அது அரசரின் நகரம் இயேசுவும் புதிய தாவீதாக புதியதொரு பொற்காலத்தை சமாதான வாழ்வைத் தரவும் பிறந்தார். அவர் அமைதியின் அரசர் உலகில் அமைதியின்றித் தவிப்பவர்களுக்கு அமைதி உண்டாகுக என்பது அவரின் பிறப்புச் செய்தியாக கொடுக்கப்பட்டது. கடவுள் மனிதனாகப் பிறந்தநாள் வாழ்வு இருளாய் போனவர்க்கு விடுதலையும், துயருவோர்க்கு பெருமகிழ்ச்சியையும், அமைதி இழந்தவர்க்கு சமாதானத்தையும் கொடுத்தது. இறைவனின் பிரசன்னத்தைக் கேள்வி கேட்க, நினைப்பவர்களே வாருங்கள் உங்களுக்குத் தனது பிரசன்னத்தை தர உங்களோடு உரையாட, உறவாட பகிர்ந்துண்ண, கேள்விகளுக்கு பதில் சொல்ல தவழும், தெய்வ குழந்தை. எனவே விடுதலையும் விடியலும் பெருமகிழ்வும் கொண்டு வந்த கிறிஸ்து இயேசுவின் பிறப்பு விழாவை மகிழ்ந்து கொண்டாடுவோம்.

## கிறிஸ்மஸ் சிறுகதை

# அன்பும் நட்பும்



“அம்மா கிறிஸ்மசுக்கு இன்னும் ஒருநாள் தான் இருக்கு. எனக்கு புதுச்சட்டை எடுக்காம இருக்கிறீங்களே..?” என்று அழுதான் டேவிட்.

“சரி அழாதே.... இன்னைக்கு எப்படியாவது வாங்கி தர்றேன்” என்று சமாதானம் செய்தாள் அவன் தாய். தன் ஒரே மகனுக்காக தான் சேர்த்து வைத்திருந்த பணத்தில் ஒரு புதுச்சட்டை வாங்கித் தந்தாள். டேவிட் அம்மா வாங்கித் தந்த சட்டையைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தான்.

கிறிஸ்மஸ் குடிலைப் பார்ப்பதற்காக அன்று மாலை கோயிலுக்குச் சென்றான். கோவில் வாசலில் அவன் வயதுள்ள ஓர் ஏழைப் பையன் தன் அம்மாவிடம் புதுச்சட்டைக்காக அழுது அடம்பிடித்துக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த டேவிட்டுக்கு அந்தச் சிறுவன் மேல் பரிதாபம் தொற்றிக் கொண்டது. “நான் ஆடையின்றி இருந்தேன், என்னை உடுத்தினாய்” என்று இயேசு சொன்ன வார்த்தைகள் அவன் காதில் ஒலித்தது.

அழுது கொண்டிருந்த பையனை சைகை காட்டி அழைத்தான். “தம்பி உனக்கு புதுச்சட்டை தானே வேணும்? நான் தர்றேன். அழாதே.... என் கூட வா...” என்று கூறி தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று தனக்காக அம்மா வாங்கி வைத்திருந்த புதுச்சட்டை-யையும், சில இனிப்புக்களையும், கொடுத்து அனுப்பி வைத்தான். இயேசு சொன்ன வார்த்தைகளை தான் பின்பற்றியதற்காக டேவிட் மகிழ்ச்சியடைந்தான்.

தன் பழைய சட்டையை எடுத்து துவைக்க ஆரம்பித்தான். அப்போது கடையிலிருந்து வந்த அவன் தாய் “என்னடா, என்ன செய்றே?” என்று கேட்டாள். “அம்மா... அது வந்து....” எப்படி சொல்வதென்று தெரியாமல் டேவிட் தடுமாறினான்.

“ஆமா, புதுச்சட்டைத்தான் இருக்கே, அப்புறம் ஏன்பா? இந்த பழைய சட்டையைத் துவைக்கிறே?”

“அது.... கிறிஸ்மசுக்கு போடுறதுக்கு தாம்மா இந்தச் சட்டையைத் துவைக்கிறேன்...”

“ஏன்டா ஏன்? அப்போ புதுச்சட்டை?”

“அம்மா நான் கோயில்ல ஒரு பையனைப் பார்த்தேன். அவன் நம்மை விட ரொம்ப ஏழையம்மா. புதுச்சட்டைக்காக அவன் அழுத அழுகையைப் பார்க்க ரொம்ப கஷ்டமாக இருந்தது. அதனால் என் சட்டையை அவனுக்கு கொடுத்துவிட்டேன்.

“ஏன்டா.... நாம மட்டும் பெரிய பணக்காரங்களா? இந்தப் புதுச்சட்டையை வாங்க நான் எப்படி கஷ்டப்பட்டு பணம் சேர்த்தேன் தெரியுமா?”

“அம்மா.... ஏழை ஒருவனுக்குச் செய்த உதவியெல்லாம் எனக்கே செய்தான் என்று இயேசு சொல்லியிருக்கிறாரு இல்லையா... அதான்...”

“உனக்கு இதெல்லாம் செய்ய எப்படிடா மனசு வந்தது?”

“நம்மைவிட ஓர் ஏழைப் பையனுக்கு நம் உணவையோ, உடையையோ, பகிர்ந்துக் கொள்ளும்போது அதுதான் உண்மையான கிறிஸ்மஸ் ஏனெனில் இயேசு தம்மையே நமக்குக் கொடுத்து நம்மை வாழ வைப்பதற்காகத்தான் அவர் இங்கு வந்து பிறந்தார்னு.. எங்க மறைக்கல்வி வகுப்பு டீச்சர் சொன்னாங்கம்மா...”

மகன் சொன்னதைக் கேட்ட தாய்க்கு பெருமையாக இருந்தது. தன் மகனின் இரக்க குணத்தை எண்ணி வியப்படைந்தாள். பெறுவதை விட தருவதே இன்பம் என்ற மகனின் வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்தாள். அதேவேளை டேவிட்டின் குடும்பத்திற்காக இறைவனை மன்றாடினான் அந்த ஏழைச் சிறுவன்.



# வத்திக்கானில் கண்காட்சியகத்திற்கு திடீர் விஜயம் செய்து, ஆச்சரியம் கலந்த சந்தோசத்தை அளித்த திருத்தந்தை !!



கடந்த திங்கட்கிழமை பிற்பகல் வேளை திருத்தந்தை வத்திக்கானில் 100 கிறிஸ்மஸ் குடில்களைப் பார்வையிட்டார். இத்தாலி மற்றும் 40ற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 150க்கு மேற்பட்ட காட்சிகளை பார்வையிட்ட திருத்தந்தை அங்கு கூடியிருந்தவர்களை செபித்து ஆசீர்வதித்தார். திடீர் விஜயத்தை மேற்கொண்ட திருந்தந்தையின் வருகை சுற்றுலாப் பயணிகளை பெரும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியது.

# பிறப்பும்! சிறப்பும்!!

தோன்றிற் புகழும் விதமாகத் விதமாகத்
தோன்றச் சொன்னான் வள்ளுவனும்
ஊன்றிப் பார்த்தால் இதுபோல
உலகில் பிறந்தார் யாருண்டு?

பிறக்கும்போதே சிறப்போடு
பெரிதாம்மாண்பும் திகழ்வண்ணம்
சிறக்கும்படியாய் தோன்றியவர்
தேவன் மகனாம்இயேசுபிரான்!

இயேசு கிறிஸ்து பிறப்பினையே
எவர்க்கும் உணர்த்த வானத்தில்
வீசும் விண்மீன் தோன்றியது
விடிவும் புவிக்கே வந்ததென!

மண்ணில் அமைதி மறு உலகில்
மகிமை என்றும் நிலைப்பதற்கே
மண்ணில் தெரியும் மானிடனாய்
ஆண்டவர் பிறந்தார் ஆரீராரோ!

# மின்னொளியில் கிறிஸ்மஸ்



அனைத்து அம்சங்களையும் மின் விளக்குகளால் பிரமாண்டமாக உருவாக்கி புதிய உலகச் சாதனை படைத்துள்ளனர், அமெரிக்காவில் உள்ள காண்பெர்ரா நகரில் இந்த மின்னொளி கிறிஸ்மஸ் கொண்டாட்ட காட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனை டேவிட் ரிச்சர்டு என்பவர் 12 மில்லியன் எல்.இ.டி பல்புகளைக் கொண்டு உருவாக்கியுள்ளார். இதில் கிறிஸ்மஸ் மரம், கிறிஸ்மஸ் தாத்தா, பனிக்கரடி சாரட் வண்டி, பரிசுப் பொருட்கள் போன்று பல அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் 3டி (3D) எனப்படும் முப்பரிமான உருவங்களாக காட்சியளிக்கின்றன. இந்தக் கிறிஸ்மஸ் கொண்டாட்டக் காட்சிகளை சுமார் 110 கிலோ மீட்டர் அளவில் வயர்களைக்கொண்டு மின் அணைப்புக் கொடுத்து உயிர்பெறச் செய்துள்ளார். இரண்டு மாத கடின உழைப்பில் உருவான இந்த மின்னொளி கிறிஸ்மஸ் அம்சங்களுக்காக 7.49.000 அமெரிக்க டாலர் செலவு செய்யப்பட்டது.

டேவிட் ரிச்சர்ட் மின்விளக்குகளைக் கொண்ட காட்சிகளை உருவாக்குவதில் கைதேர்ந்தவர். இவர் கடந்த இரு வருடங்களாக கிறிஸ்மஸ் மரம், செண்டாகிளாஸ் போன்ற உருவங்களை மின் விளக்குகளால் உருவாக்கி உலகச் சாதனை படைத்துள்ளார். இவர் புது முயற்சியாக கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் அனைத்தும் தற்போது மின்விளக்குகளால் உருவக்கி உலகச் சாதனை நிகழ்த்தி வருகின்றார்.

ரிட்ஸ் அண்ட் என்ற குழந்தைகள் நிறுவனம் இந்தச்சாதனையை உருவாக்குவதற்கான பண உதவிகளைச் செய்துள்ளது. இந்த மின்னொளி கிறிஸ்மஸ் கொண்டாட்டக் காட்சிகளை பலரும் கண்டு வியந்து சொல்கின்றனர். இதன் மூலம் கிடைக்கும்தொகையை நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் குறிப்பாக புற்று நோயால்பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான மருத்துவச் செலவிற்குப் பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# கிறிஸ்மஸ் நன்நாளை....

நத்தார் மரங்களை அலங்கரிப்போம்
வாழ்த்து மடல்களை அனுப்பிடுவோம்
மாட்டுக் குடில்களை அமைத்திடுவோம்
கிறிஸ்மஸ் நன்நாளை வரவேற்போம்!

பாலனாய் இயேசு ஏன் பிறந்தார்?
மாந்தர்க்கு அமைதியை கொடுப்பதற்கே
சிலரோ அதையும் மறந்தனரே!

மரி அன்னை இறைவார்த்தைக்கு கீழ்ப்படிந்தாரே,
முழு மனதுடன் இறைவனை செபித்தாரே,
கீழ்ப்படிவோம் நாமும் அவ்வாறே,
உள்ளங்களைத் திறப்போம் இயேசுவுக்கே!

தீமைகளை ஒழித்து விடுவோமே,
எளியோருடன் என்றும் பகிர்வோமே,
வாழ்வின் தீபத்தை ஏற்றுவோமே,
இயேசுவை உள்ளங்களில் ஏற்போமே!!

மாக்ரட் ஜயசீலி ஜேதான்



**“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும், பயனும் அது” (குறள்)**



# குடும்பமே கோவில் – திருக்குடும்ப திருவிழா

**கலாபூஷனம் புலவர். அரியநாயகம், நெடுந்தீவு.**

அன்பு என்ற பண்பையும், அறம் என்ற பயனையும் வாழ்வாகக் கொள்ளும்போது இல்லற வாழ்வு இனிதாக அமைகிறது. திருக்குடும்ப விழாவை சிறப்பாகக் கொண்டாடும் நாம் அன்பே கடவுள், அன்பு உறையும் இல்லம் ஆண்டவன் வாழும் இல்லம் எனில் குடும்பம் ஒரு கோவிலாகத்தான் இருக்கும். அன்பான குடும்பத்தில் ஆணவம் இல்லை, அடக்குமுறை இல்லை. அங்கு அமைதியும், மகிழ்ச்சியும் இருக்கும். இதைத்தான் திருக்குடும்பம் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது.

குடும்பம் ஒரு கோவில், நல்ல குடும்பம் பல்கலைக்கழகம், குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை, குடும்பம் ஒரு கதம்பம் என்று சொல்வார்கள். குடும்பத்தில் இறைவனைக் காணவேண்டும். குடும்பத்திலே நல்ல பண்புகள் கற்றுத்தரவேண்டும். குடும்ப உறவுகளால் நல்ல மணம் வீசவேண்டும். குடும்பம் திருச்சபையின் ஆணிவேராக அமைந்திட வேண்டும். எந்தக் குடும்பத்தில் அடுத்தவரின் மீது அன்பும் அக்கறையும் இருக்கிறதோ அந்தக் குடும்பம் மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் வாழ்வாங்கு வாழ்கின்றதோ அங்கு வளமாக வாழ்வு நடக்கும்.

சூசை, மரியா, இயேசு, வாழ்ந்த திருக்குடும்பம் நம் எல்லாக் குடும்பங்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கின்றது. திருக்குடும்பத்தின் தலைவர் யோசேப் அவர்கள், ஒரு நேர்மையாளர் என்றும், பிறருக்கு இகழ்ச்சி ஏற்படுவதை சிறிதும் விரும்பாதவர் என்றும் அவரைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது (மத் 1:18) எதையும் தீர்க்கமாய்ச் சிந்திக்கும் தன்மை கொண்டவர். ஆகவே அவருக்கு மண ஒப்பந்தம் ஆகியிருந்த மரியா கருவுற்றிருந்ததை அறிந்தபோது பொறுமையையும், நிதானத்தையும் இழக்காமல், அமைதி காத்து, அதுகுறித்து சிந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வருவதைப் பார்க்கிறோம் (மத் 1:18-19)

தம் சொந்த விருப்பத்தை கடவுளிடம் திணிக்காமல், கடவுளின் திருவுளத்திற்கு முற்றிலும் தம்மை உட்படுத்திக்கொண்டார். அவரிடம் நேரடியாகப் பேசாத கடவுள், தம் தூதரை யோசேப்பிடம் அனுப்பி அவரது கனவில் அத்தூதர் மூலம் செய்தியை அறிவிக்-கின்றார். கருவுற்றிருக்கும் மரியாவை மனைவியாக ஏற்றுக்கொள்வதோடு, தூய ஆவியின் ஆற்றலினால் மரியாவுக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்குப் பெயரிட்டு சட்டப்படி அந்தக் குழந்தையின் தந்தையாகத் திகழ அறிவுறுத்தப்பட்டபோது யோசேப்பு அதை அமைதியாக ஏற்றுக்கொண்டார் (மத் 20:2)

தம் வளர்ப்புக் குழந்தைக்கு ஆபத்து என்று தம் கனவில் வானதூதரிடமிருந்து செய்தியைப் பெற்றுக்-கொண்டவுடனேயே நீண்டதூரத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல் குழந்தை இயேசுவையும், மரியாவையும் அழைத்துச் செல்கிறார். வளர்ப்புக் குழந்தைதானே என்று பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் அக்கறையுடன் செயற்படுகிறார். ஆபத்து அகன்றதும் திரும்பவும் சொந்த நாட்டிற்குத் திரும்பி, தம் குடும்பத்தைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்கிறார். தம் உழைப்பைப் பயன்படுத்தி குடும்பத்தை காப்பாற்றுகின்றார். யோசேப்பின் உழைப்பை மனதில் கொண்டு இயேசு “தச்சருடைய மகன்” என்று வர்ணிக்கப்பட்டுள்ளார். (மத் 13:55) பன்னிரெண்டு வயது நிரம்பிய இயேசு கவலையுடன் அவரை தேடுவதின் மூலம் தம்மை ஒரு பொறுப்புள்ள குடும்பத் தலைவன் என்று நிரூபித்துள்ளார் (லூக் 2:48)

அன்னை மரியாவைப் பற்றி நாம் சிந்திக்கும்போது அவர் கடவுளின் திருவுளத்திற்கு முழுவதும் பணிந்து இருந்தார் எனத் தான் நாம் பார்க்கின்றோம். கபிரியேல் தூதர் மரியாவிற்கு இறைவன் தந்த செய்தியை அறிவித்த பொழுது அவருக்கு பன்னிரெண்டு அல்லது பதின்மூன்று வயதிருக்கும். அவருக்கு வழங்கப்பட்ட செய்தி அவ்வளவு எளிதானது அல்ல. என்றாலும் கடவுளுக்குத் தம் கீழ்ப்படிதலை தெளிவாக உணர்த்தி, தம் தாழ்ச்சி மற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்தி, ஓர் அடிமையாக்கிக் கடவுளின் கரங்களில் தம்மை ஒப்படைக்கின்றனார் (லூக் 1:38)

“எல்லாமே கடவுளின் செயல், அவரே யாவற்-றையும் இயக்கட்டும்” என்கிற மனப்பான்மையை கொண்டிருந்ததால் குடும்ப வாழ்வில் அனைத்தும் அவருக்கு தங்குதடையின்றி முன்னேறிச் சென்ற-ரெனலாம். துளிகூட அன்னை மரியாவிடம் பெருமை இல்லை என்பதை எலிசபெத்திற்கு உதவிட அவர் சென்றதிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம். (லூக் 1:39-45, 56) எதையும் பொறுத்துக் கொள்ளும் மனவலிமை அவரிடம் இருந்தது. ஒரு குடும்பத் தலைவிக்கு இந்தக் குணம் மிக மிக அவசியம். சில நிகழ்வுகளின் அர்த்தம் அவருக்குப் புரியாத போது அங்கலாய்த்துக் கொள்ளாமல் யாவற்றையும் மனதில் இருத்திச் சிந்தித்தார் (லூக் 2:19,51)

ஏரோது அரசனின் அச்சுறுத்தல் காரணமாக தம் குழந்தையைக் காப்பாற்றுவதற்காக முகம் சுளிக்காமல் முதலில் எகிப்து நாட்டிற்கும், பிறகு அங்கிருந்து கலிலேயாப் பகுதிக்கும் புறப்பட்டுச் சென்றார் (மத் 2:22) இதில் அவரது தாய்மைப் பண்பையும், பொறுப்பு-ணர்வையும் காணக்கூடியதாக உள்ளது.

காணாமற் போன இயேசுவை மிகக் கவலையுடன் யோசேப்புடன் தேடும்பொழுது அன்னை மரியா மென்மையான தாய்மைப் பண்பை வெளிப்படு-த்துகின்றார். எருசலேம் கோவிலின் பற்று, திருவிழாக் காலங்களில் ஆர்வம் ஆகியவை இயேசுவின் மனதில் உருவாகிட மூல காரணம் அன்னை மரியாள் தான் என்றால் இது உண்மை வெறும் புகழ்ச்சியல்ல.

தேடிக்கொண்டு எருசலேமிற்குத் திரும்பிச் செல்கின்றனர். ஆலயத்தில் அவரைக்கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். “மகனே ஏன் இப்படிச் செய்தாய் உன் தந்தையும் நானும்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..




**பணமா பெரிது? நம் குழந்தை அதைவிட மதிப்பு வாய்ந்தவன் அல்லவா? (தோபி 5:19)**

வரலாறு குறித்து வைத்துள்ள சில கொடூரமான அரசர்களுள் ஒருவன் ஏரோது. பதவி வெறி பிடித்த ஏரோது பதவி பறிபோய்விடுமோ என்ற பதைபதைப்பில் தம் காலத்தை கடத்தி வந்தான். தம் குடும்பத்தினர், தம்மீது அன்பு செலுத்தியவர்கள் அனைவரையும் தமது ஆட்சியைப் பறிக்கக் காத்திருக்கும் கழுகுகள் என்ற எண்ணத்துடனே நோக்கினான். அதற்காகத் தம் குடும்பத்தினரைக் கொலை செய்யும் அளவுக்கு துணிந்தான்.

கி.மு 35இல் தமது மைத்துனரை எரிக்கோவில் உள்ள குளத்தில் மூழ்கடித்து ஏரோது கொன்றான். கி.மு 34இல் தம் சகோதரர் யோசேப்பை கொலை செய்தான். கி.மு 29இல் மனைவி மரியம்னே, சில மாதங்களுக்குப் பிறகு தாய் அலெக்ஸாந்தரா மற்றும் கி.மு 25இல் மற்றொரு மைத்துனர் காஸ்டோபர் ஆகியோரின் உயிரைப் பறித்தான். கி.மு நான்காம் ஆண்டு, தான் தற்கொலை செய்து கொள்வதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு தம் மற்றொரு மகன் அந்திபாடர் என்பவரின் வாழ்வையும் முடித்தான். இதனால், “ஏரோது வீட்டில் மகனாக இருப்பதைவிட பன்றியாக இருப்பது மேல்” என்று பேரரசர் அகுஸ்துஸ் சீசர் கேலியாகச் சொன்னார்.

இந்தப் பாதகனின் ஆட்சியில் யூதேயாவில் உள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார். யூதர்களின் அரசர் பிறந்துள்ளார் என்பதை அறிந்த ஞானிகள் மூவரும் அவரைத் தேடி புறப்பட்டார்கள். சிங்கத்தின் குகைக்குள் நுழைந்தார்கள். போட்டி அரசர் வந்துவிடக்கூடாது என்று வெறிகொண்டு அலைந்த ஏரோதிடம் சென்று, எந்த இடத்தில் மீட்பர் பிறந்திருக்கிறார் என்று கேட்டார்கள். பதறிய ஏரோது, எல்லா தலைமைக் குருக்களையும், மக்களிடையே இருந்த மறைநூல் அறிஞர்களையும் கூட்டி மெசியா எங்கே பிறப்பார் என்று விசாரித்தான்.

மெசியா பிறக்கும் இடம் பெத்லகேம் என்று உறுதியானவுடன் ஞானிகளை தனியே அழைத்து ஒரு நாடகம் ஆடினான். தானும் அவரை வணங்க வேண்டும். எனவே அவரைப் பற்றி திட்டவட்டமாக எனக்குத் தெரிவியுங்கள் என்றான். வஞ்சனையும் விஷமும் கலந்த வார்த்தையைத் தூவினான். நாட்கள் ஆனது. காத்திருந்த விழிகள் பூத்துப்போனது. ஞானிகள் வந்தபாடில்லை. ஏமாற்றம் ஒருபுறம், பதவி பறிபோய்விடுமோ என்ற பயம் மறுபுறம் என்று ஏரோது துடித்து எழுந்தான். மிகுந்த சீற்றங்கொண்டான். தாம் ஏற்கனவே கேட்டறிந்ததின்படி காலத்தை கணக்கிட்டு இரண்டு வயதும் அதற்கு உட்பட்டவையுமான எல்லா ஆண் குழந்தைகளையும் கொலை செய்ய உத்தரவிட்டான். (மத் 2:1-19)

இந்தப் படுகொலை பற்றி யூத வரலாற்று ஆசிரியர் யுசேபியுஸ் எந்தத் தகவலையும் தரவில்லை. இந்நிலையில், எத்தனை குழந்தைகள் கொலை செய்யப்பட்டார்கள் என்பது குறித்து பல தகவல்கள் உள்ளன. கிரேக்க வழிபாட்டில் 14,000 சிறுவர்கள் எனவும், சிரிய வழிபாட்டில் 64,000 சிறுவர்கள் எனவும் இருக்கிறது. வெளிப்பாட்டு நூலின்படி 1,44,000 சிறுவர்கள் இரத்தம் சிந்தினார்கள் என்று மத்திய காலங்களில் குறிப்பிட்டார்கள்.

இருந்தபோதும் பெத்லகேம் மிகச் சிறிய நகரம் என்பதால் இவ்வளவு அதிக சிறுவர்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை என்னும் புரிதலை தற்கால ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள். அதன்படி 20 முதல் 25 வரையிலான சிறுவர்கள் மறைசாட்சியாகி இருக்கலாம் என்று அறியத்தருகிறார்கள். விபரம் அறியும் முன்னே மரணத்தைத் தழுவிய இக்குழந்தைகளைத் திருச்சபை பெருமையுடன் வணங்குகிறது. ஏனென்றால், மறைக்கலகத்தில் மடிந்த முதல் மொட்டுக்கள் இவர்கள். இவர்கள் ஒவ்வொருவருமே கிறிஸ்துவுக்காக மட்டும் இரத்தம் சிந்தவில்லை. கிறிஸ்துவுக்குப் பதிலாகவும் தங்கள் உயிரை இழந்திருக்கிறார்கள். இரத்தம் சிந்தி அதன் வழியாகப் பெற்ற திருமுழுக்கின் வழியாக விண்ணகப் பேரின்பம் அடைந்திருக்கிறார்கள்.



# தாழ்ச்சியில் பிறந்த மகிழ்ச்சி



இயேசுவின் பிறப்பு மாபெரும் மீட்பு வரலாற்றின் தொடக்கம். பாவச் சேற்றில் கிடந்த மனிதனை மீட்க மனித உருவெடுத்த கடவுளின் அன்பை நினைவுகூரும் விழாதான் கிறிஸ்மஸ் விழா. அமைதிக்கான வழியை அடையாளம் காட்டியதால் மக்கள் அகமகிழ்ந்து கொண்டாடும் ஆனந்த விழா. அடிமைகள், ஒதுக்கப்பட்டவர்கள், கடைநிலை மனிதர்களுக்கும் உண்மையான நம்பிக்கையைத் தரும் ஓர் உன்னத விழா. காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்ட ஒளியின் விழா. இறைவனே உலகைத் தேடிவந்த அற்புத விழா. கடவுள் மனிதர்மேல் கொண்ட இரக்கத்தின் விழா.

"கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவம் ஏற்று மனிதருக்கு ஒப்பானார்" (பிலிப் 2:7)

ஆம், அக்காலத்தில் சூசை மக்கள் தொகை கணக்குக் கொடுக்க யூதேயா நாட்டிற்குச் செல்கிறார். ஏனென்றால் உரோமையர் ஆட்சியில் அடிமைகள் கணக்குக் கொடுக்க வேண்டும். "நான் இறைமகனைக் கருத்தாங்கியிருக்கிறேன்" என்ற மமதை இன்றி தாழ்ச்சியின் சிகரமான அன்னை மரியாவும் உடன் செல்கிறார். தான் பிறக்க வேண்டிய நேரத்தையும், இடத்தையும் ஏற்கெனவே தீர்மானித்துவிட்ட இறைமகனும் உடன் செல்கிறார். அங்குதான் பெத்லகேம் என்ற சிற்றூரில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறக்கிறார்.

இயேசு அடிமையின் கோலத்திற்குத் தம்மையே தாழ்த்திக் கொண்டதால் தாம் மீட்பின் மகிழ்ச்சியை நாம் பெற முடிந்தது. மேலும் இயேசுவின் பிறப்பு ஏழை, எளிய, கபடற்ற ஆடுகள் மேய்க்கும் இடையர்களுக்குத்தான் முதன் முதலில் அறிவிக்கப்பட்டது. "ஏனெனில் தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத் 5:8) என்று வாசிக்கிறோம். இயேசுவைத் தரிசிக்கக் கூடிய பெரும் பாக்கியம் ஞானிகளுக்கும், கபடற்ற இடையர்களுக்கும் தான் அருளப்பட்டது. எனவே, கிறிஸ்மஸ் என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்வினை நினைவுகூரும் சாதாரண நிகழ்ச்சியல்ல. இது ஒரு தாழ்ச்சியில் பிறந்த மகிழ்ச்சி. பணிவும், தாழ்ச்சியும், அன்பும், இரக்கமும் உள்ளவர்கள்தான் இயேசுவின் பிறப்பை மகிழ்வோடு கொண்டாட முடியும்.

எனவே, நாம் நம்முடைய ஆணவம், அகந்தை, மேட்டிமைத்தனம், ஈகோ, பொறாமை, மன்னிக்கும் மனமின்மை, பகிர்வுத் தன்மை இன்மை போன்றவற்றைக் களைந்துவிட்டு, எளிமையும், தாழ்ச்சியும் கொண்டவர்களாய் நடந்தால் நாமும் இறைவனைக் காண முடியும்.

ஆக, கிறிஸ்மஸ் என்பது இயேசுவின் அன்பைப் பிறருக்குப் பகிர்ந்தளிக்கும் ஓர் இனிய அனுபவமாக இருக்க வேண்டும். எப்படிக் கொண்டாடலாம். இவ்வருடக் கிறிஸ்மஸ் விழாவை? ஒரு சிறிய பட்டியல் இடலாமா?

1. கிறிஸ்மஸ் ஒரு பகிர்வின் நாள். நமது குடும்பத்தில், நட்பு வட்டாரத்தில், உறவுகளில் நாம் வெறுக்கும் நபர் அல்லது நம்மை வெறுக்கும் யாராவது இருந்தால் அவர்களோடு பேசுவோம். தொலைபேசியில் "ஹாய்", "ஹலோ" என்று சொல்வோம். கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைப் பகிர்வோம். முடிந்தால் அவர்கள் வீட்டிற்குச் சென்றுகூட பேசலாம். "நான் ஏன் அவன்கிட்ட பேசணும்?" என்ற ஈகோவை அகற்ற முடியாதவர்கள் கிறிஸ்மஸ் புத்தாடையை மகிழ்ச்சியாக அணிய முடியாது. ஒருவருக்கு நாம் அளிக்கும் மன்னிப்பே நம்மை நம் பாவங்களிலிருந்து விடுதலையாக்கும். மன்னித்துப் பாருங்கள், எவ்வளவு அமைதியும், மகிழ்ச்சியும் உங்கள் உள்ளத்தை நிரப்புகின்றது என்று அறிவீர்கள்.

2. நமக்குச் சொந்த பந்தமில்லாத, யாரோ ஒரு தெரிந்த பக்கத்து வீட்டுக்காரர்கள் அல்லது நம் வீட்டில் வேலை செய்பவர், அவர்களின் குழந்தைகளை இந்த விழாநாள் மகிழ்வில் இணைத்துக் கொள்வோம். நம்மோடு அமர்ந்து உணவருந்த இடமளிப்போம். ஏதாவது பரிசுப் பொருட்கள் கொடுப்போம். அப்போது அவர்கள் முகத்தில் தெரியும் சிரிப்பை இரசிப்போம். இதுதான் "ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்பது" அதோடு நம் கிறிஸ்துவையும் அறிமுகப்படுத்தி இது அன்பின் விழா, அதுதான் உங்களையும் அழைத்தோம் என்று உணர்த்துவோம்.

3. இதைத்தவிர ஒவ்வோர் ஆண்டும் ஏதாவது ஒரு நல்ல விசயத்தை கிறிஸ்மஸ் நாளில் செய்ய வேண்டும் என்று தீர்மானம் எடுப்போம். ஒரு முதியோர் இல்லம் அல்லது ஆதரவற்ற சிறுவர் இல்லங்களுக்குச் சென்று, கிறிஸ்து பிறப்பு மகிழ்வைப் பகிரலாம். எவ்வளவோ ஆயிரங்களை விழாவிற்காகச் செலவு செய்யும் நாம் ஒரு கேக் அல்லது இனிப்பு என்று வாங்கிக் கொடுத்து நமது அன்பைப் பகிரலாம். "சின்னஞ்சிறிய இவர்களுக்குச் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்றுதானே கடவுள் சொல்கிறார்.

4. அருகில் உள்ள மருத்துவனைக்குச் சென்று அங்குள்ள நோயாளிகளுக்கு ஆறுதல் சொல்லி வரலாம். ஆறுதல் அளித்தால் ஆறுதல் பெறலாம். நாம் நோயுற்றபோது நமக்கு ஆதரவாக, ஆறுதலாகக் கடவுள் யாரையாவது அனுப்புவார். ஏனெனில் கடவுள் கணக்குத் தவறாதவர்.

5. பசியுற்ற ஏழைகளுக்கு உணவு தானம் வழங்கலாம்.

6. குடும்ப உறவை வலுவாக்கும் ஒரு நாளாக இதைக் கொண்டாடலாம். பார்ட்டி, சினிமா, தொலைக்காட்சி என்று நம் குடும்ப உறுப்பினர்களைத் தொலைத்து விடாமல், அனைவரும் கூடி அமர்ந்து இறைவனை மையமாகக் கொண்ட வேடிக்கை விளையாட்டுக்களைக் கொண்டாடி, மகிழ்ச்சியானச் சூழலை உருவாக்கலாம். குழுவாக அமர்ந்து பாடல்கள் பாடுவது, உரையாடுவது என்று சூழ்நிலையை கலகலப்பாக்கலாம்.

7. வாழ்த்து அட்டைகள், பரிசுப் பொருட்களை பரிமாறிக் கொள்ளலாம். அதிக விலையுள்ள பொருட்கள் என்பது தேவையில்லை. அவை வெறும் மாயை. அதிக விலையுள்ள வாழ்த்து அட்டைகளைவிட நம் கையால் எழுதிய அட்டைக்கு மதிப்பு அதிகம். ஒரு காலத்தில் நம் பெற்றோர், சகோதரிகள், சகோதரர்கள் அனுப்பிய பழைய வாழ்த்து அட்டைகள் இன்று நம் கையில் கிடைக்கும்பொழுது நம் மனம் நெகிழ்வதை உணர முடிகிறது அல்லவா!

8. மேலும் நேரே தேடிச் சென்று ஒரு புன்னகையைக் கொடுப்பதுகூட உயர்ந்த விலை மதிப்புள்ள பரிசைவிட மேலானது. விதவையின் இரண்டு காசு காணிக்கைதான் கடவுளால் அங்கீகரிக்கப்பட்டது. இங்கு கொடுப்பவரின் மனநிலைதான் முக்கியம்.

கடவுள் நல்லோர் மேலும், தீயோர் மேலும் தான் மழையைப் பொழிகிறார். சூரியன் ஒளி வீசச் செய்கிறார். தென்றல் காற்றை அனைவருக்கும் தான் வீசச் செய்கிறார். எனவே அனைத்து மனிதரும் கடவுளின் சாயலிலும், உருவிலும் படைக்கப்பட்டவர் என்பதை உணர்வதே ஆன்மீகத்தின் வளர்ச்சி. எனவே, இத்தகைய விழா நாட்களில் அனைத்து மனிதர்களோடும் இணக்கமாக வாழவேண்டிய அவசியத்தை உணர்வோம். இல்லையென்றால் கிறிஸ்மஸ் விழா கொண்டாடுவது வெறும் பரிசேயத்தனம் ஆகிவிடும்.

இன்னும் நாம் வசிக்கும் பகுதிகளில் அல்லது நமது அன்பியங்களில் வயது மூப்பின் காரணமாகவோ, நோயினால் பாதிக்கப்பட்டதாலோ எழுந்து நடமாட முடியாமல், ஆலயத்திற்குக்கூட வர இயலாமல் வேதனைகளில் வாடிக் கொண்டிருக்கலாம். அவர்களை அன்று சென்று சந்தித்து, உரையாடி, ஆறுதலான நம்பிக்கையான வார்த்தைகளைக் கூறிவிட்டு வரலாம்.

இத்தகையோர்க்கு நம் பங்குத்தந்தையர்களிடம் பேசி வாரம் ஒருமுறை நற்கருணை வழங்க ஏற்பாடு செய்யலாம். "இன்றைக்கு அவர்களுக்கு, நாளைக்கு நமக்கு!" நடமாட முடியாமல் வீட்டில் அடைத்து கிடப்பது எவ்வளவு கொடுமை? என்று அப்போதுதான் நமக்குப் புரியும். இன்றைக்கு நாம் செய்யும் உதவி நாளைக்கு நம்மைப் பார்க்கக் கடவுள் யாரையாவது ஏற்பாடு செய்வார் என்பது நிச்சியம்

**முடிவாக...**

இத்தகு பகிர்வு இல்லாத வெறும் கொண்டாட்டங்களை ஆண்டவர் வெறுக்கிறார். புத்தாடை, வாழ்த்து அட்டைகள், கிறிஸ்மஸ் மரம், குடில், வண்ண வண்ண நட்சத்திரங்கள், கிறிஸ்மஸ் தாத்தாவின் வருகை, ஆடல், பாடல், வேடிக்கை, கேளிக்கை, விருந்து... அப்புறம் ஆலயத் திருப்பலி இதுதானே நமது வழக்கமான கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள்?! "உங்கள் திருவிழாக்களை அருவெறுக்கின்றேன்" (ஆமோஸ் 5:21) என்கிறார் கடவுள். "கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்" (லூக் 6:38) என்கிறார். நாம் பிறருக்கு எதைக் கொடுக்கிறோம்?

தொடர்ச்சி 15ம் பக்கம்.

## 01 வியாபாரத்தை...

கொழும்பு உயர்மறைமாவட்ட கத்தோலிக்க ஆங்கில வாராந்த செய்தி பத்திரிகையான 'மெசன்ஜர்' 150வது நூற்றாண்டு விழாவை கடந்த 16ம் திகதி திங்கட்கிழமை கொழும்பு ஆயர் இல்லத்தின் கேட்போர் கூடத்தில் சிறப்பிக்கப்பட்டது. அதில் பிரதம அதிதியாக கலந்துக்கொண்ட அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உரையாற்றுகையில், 1869ல் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் மசன்ஜர் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டாலும் 1948ல் சுதந்திரம் கிடைத்த பின்பு, இப்பத்திரிகையினூடாக இலங்கையராகிய, எமது அடையாளத்தை புதுப்பித்து எழுச்சிக்கொள்ள முடிந்தது. இவ்வெழுச்சியினால் 1950களில் எமது நாடு, எமது இனம், நாம் யார்? எமது அடையாளம் என்ன? எமது எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும்? போன்றவற்றை இனங்கண்டு, அடிமைப்பட்டிருந்த வட்டத்திலிருந்து வெளியே வந்து சிந்திக்கத்தொடங்கினோம். ஆரம்ப காலங்களில் நடந்த புரட்சிகளில் முகம்கொடுத்து வந்த அனுபவங்களிலிருந்து மெசன்ஜர் பத்திரிகை கற்றுக்கொண்ட பாடங்களை, நாம் எதிர்காலத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை அறிந்துக்கொள்ள முடிந்தது. விசேசமாக விசுவாசக் கண்ணோட்டத்தில் நிகழ்வுகளைப் பார்த்து முன்னோக்கி செல்லமுடிந்தது.

1970களில் இளைஞர் யுவதிகள் சமூகத்தில் தமது அடையாளத்தை, தமது பொறுப்பை நிறைவேற்ற முனைந்தபோது ஏற்பட்ட முறுகல் நிலை, 30 வருட கால யுத்தம் போன்றவைகளின் பின்பு இலங்கை மீண்டும் முன்னேற்றத்தை நோக்கி செல்லவும் நீதி நியாயமான சமூகத்தை உருவாக்க எடுக்கும் முயற்சியுடன் இச்செய்தி பத்திரிகை மறு வடிவமாக வெளிவந்தது. இந்த முன்னேற்றம் எதிர்காலத்தில் 'ஐக்கிய சமாதான இலங்கையை' உருவாக்கும் பொறுப்பு எம்மை நோக்கி வருகிறது. அதனால் அரசியல், இனங்கள் வேறுப்பாடுகளில் பிரிவினை வாதத்தைப் பற்றிக் கதைக்காமல், ஒருவர் ஒருவரைச் சுட்டிக் காட்டாமல், எமது இனங்கள், மதங்கள் ஒன்றிணைந்து இந்நாட்டு மக்களின் நன்மைகளுக்காக முன்னோக்கி செல்ல, மக்களைச் சக்திப்படுத்த இப்பத்திரிகையினூடாகச் சேவையாற்ற வேண்டும்.

இன்று சமூக வளைத்தளங்களை உருவாக்கு-பவர்கள் பிரிவினையை உருவாக்கி தமது சுயநலமான நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள நாட்டு மக்களுடன் விளையாடுவதைக் காண்கிறேன். இந்தக் கொள்கையை அகற்றிக்கொள்ளுங்கள். ஊடகங்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ள இக்காலத்தில் அதை வியாபாரத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், தமது அடையாளத்தை சரியான முறையில் நிலைநாட்டி சாந்தி, சமாதானத்திற்காக ஊடகத்தைப் பயன்படுத்துமாறு கேட்டு விடைபெறுகிறேன்.

## 01 150வது ஆண்டு...

150வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டா-டும் இந்நிகழ்விலே கடவுளுக்கு ஆழ்ந்த நன்றிகள் உரித்தாகுக. Messenger பத்திரிகையின் இந்த தொடர் பயணமானது, இயேசு கிறிஸ்துவின் பயணத்திற்கு ஒத்தது. தோடக்கத்தில் இருந்து கரடு முரடான பாதையினூடாக பயணித்த நாம், பல தடைகளையும் தாண்டி, நற்செய்தியை பகிருவதை நோக்கமாக கெண்டு தொடர்ச்சியான பயணத்தில் ஈடுபட்டோம். இவ்வருடம் யாரும் எதிர்பாரா விதமாக நடைபெற்ற குண்டுத்தாக்குதலில் இறந்த எமது சகோதர சகோதரிகளையும் இந்நேரம் நினைவு கூறுகிறோம். யாராலும் எக்காலத்திலும் இந்நிகழ்வை மறக்க இயலாது. இன்று, 150வது நிறைவு விழாவை நற்செய்தி பகிர்ந்து கொண்டாடும் நாம், மகிழ்ச்சியுடனும் தாழ்ச்சியுடனும் இறைவனுக்கு நன்றி கூறி, நமது பத்திரிகை மென்மேலும் வளர அருள் புரிந்திட பிரார்த்திப்போம். இங்கு பணிபுரியும் ஒவ்வொருவரையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டுமென் மன்றாடுகிறேன்.

# அச்சக அறிவித்தல்

**கொழும்பு கத்தோலிக்க அச்சகமானது நத்தார் விடுமுறைக்காக மார்கழி மாதம் 20ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி 2019 வரை மூடப்பட்டிருக்கும். மீண்டும் மார்கழி மாதம் 30ஆம் திகதி வழமைப்போல் சேவைகள் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.**

**நன்றி**

**– இயக்குனர்**

## 13 குடும்பமே கோவில்...

உன்னை மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டு இருந்தோமே?" என்று மரியா கூறுகின்றார். குடும்பத்தில் இருக்க வேண்டியது. இந்த அன்பும், கரிசணையுமே. "பின்பு அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்து அவர்களுக்குப்பணிந்து நடந்தார்". (லூக் 2:51) பிள்ளைகள் பெற்றோர்க்குப் பணிந்து வாழவேண்டும், மதித்து நடக்க வேண்டும் என்பதற்கு நம் ஆண்டவர் நல்ல உதாரணம். பெற்றோர் பால் பிள்ளைகளுக்குரிய கடமையை சீராக் ஆகமம் எடுத்துரைக்கின்றது. "தந்தையரை மதிப்போர் பாவங்களுக்கு கழுவாய் தேடிக்கொள்கின்றனர். அன்னையரை மேன்மைப்படுத்துவோர் செல்வம் திரட்டி வைப்போருக்கு ஒப்பாவர் (சீரா 3:34).

தூய பவுல் குடும்ப வாழ்வுக்குத் தேவையான பண்புகளான பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை, ஆகிய பண்புகளால் உங்களை அணிசெய்யுங்கள்" (கொலோ 3:12) ஒருவர் ஒருவரை பொறுத்துக் கொள்ளவும், முறையீடு இருந்தால் மன்னிக்கவும் வேண்டும் என்கிறார். திருக்குடும்பத்தின் மூன்றுபேரும் அவரவர் கடமைகளைச் செவ்வனே திறம்பட ஆற்றி அதன்மூலம் தங்கள் மகிழ்ச்சியை பெருக்கிக் கொண்டனர். ஒவ்வொரு குடும்பமும் சிவிர இயங்கினால் சமுதாயம் சீருடனும், சிறப்புடனும் திகழும், "மகிழ்ச்சியான குடும்பங்கள் யாவும் ஒன்று மற்றொன்றைப் பிரதிபலிப்பதுபோல இருக்கின்றன. ஆனால் மகிழ்ச்சியை இழந்த நிலையில் இருக்கும் குடும்பம் தனக்கே உரித்தான பாணியில் இருக்கிறது" என்று புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் லெயோ டான்ஸ் டோய் கூறுகின்றார்.

இன்னைய உலகில் பல குடும்பங்களில் ஏற்படக்கூடிய சாதாரண பிரச்சினைகள் மிகைப்படுத்-தப்பட்டு, குடும்பங்கள் சிதைந்து போகும் சூழ்நிலை ஏற்படுவதைப் பார்க்கின்றோம். விவாகரத்து நிகழ்வுகள் பெருகிவிட்டன. தாயில்லாக் குடும்பம், தந்தையில்லாக் குடும்பம், பெற்றோர் இல்லாக் குழந்தைகள். திருமணமாகாத நிலையில் தாய்மை அடைந்து நிர்கதியில் இருக்கும் பெண்கள், இறை குடும்ப வாழ்வை சிதைத்து, சின்னபின்னமாக்கிவிட்டது.

"உங்கள் கணவருக்குப் பணிந்திருங்கள்" என்று கூறும் பவுல் அடிகளார் பணிவை, தாழ்ச்சியை இருவருக்குமே அணிகலனாகத் தருகிறார். சூசை, மரியா, இயேசு வாழ்ந்த திருக்குடும்பம் நம் எல்லாக் குடும்பங்களுக்கும் முன்மாதிரியாக விளங்குகின்றது. சூசையும், மரியாவும் தங்கள் குழந்தையை விசுவாசத்திலும், ஞானத்திலும், அறிவிலும், வளர்த்தனர். இயேசுவிற்கு முழுமையான வளர்ச்சியைக் கொடுத்தனர். இன்றைய குடும்பங்களில் கணவன், மனைவி, பிள்ளைகள் என வாழும்போது ஒருவர் ஒருவர் மீது அக்கறை காட்டும்போதும், குடும்பத்தில் இருப்போர் குறிப்பாக பெற்றோர் ஒரு நோக்கத்திற்காக வாழும்போது, விசுவாசமுள்ள பெற்றோராய் வாழ்ந்து அதை தங்கள் பிள்ளைகளுக்குத் தரும்போது நமது குடும்பங்களும் திருக்குடும்பங்களாக மாறும். குடும்பம் ஒரு கோவிலாகத் திகழும்.

## 02 இலங்கை கத்தோலிக்க...

மதித்து மரியாதை செலுத்தவேண்டும். நீதி மற்றும் அமைதி குடிகொள்ளப் பெற்ற ஒரு சமூகத்தில் மட்டுமே உண்மையான வளர்ச்சி ஏற்படமுடியும். நம் நாட்டில் இத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதில் அனைவரும் நேர்மையுடன் அர்ப்பணிப்பு நிறைந்த பணிகளை ஆற்றுவோமாக. இந்தநாடு அண்மையில் ஒரு சுதந்திரமான, நியாயமான தேர்தலைக் கண்டது. ஊழல் மற்றும் அநீதி இல்லாத ஆரோக்கியமான அரசியல் கலாச்சாரத்தின் விடியலைக் காணவேண்டுமென மக்கள் மத்தியில் பெரும் வேட்கையும் நம்பிக்கையும் உள்ளது. பொருளாதாரம் வளர்ச்சியுற்று நாடு அபிவிருத்திப் பாதையில் பயணிக்க வேண்டுமென அனைவரும் விரும்புகின்றனர். இவற்றின் மூலமே மக்களினதும் சுற்றுப்புறச் சூழலினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றின் தூதுவர்களாக நாம் மாறுவதன் மூலமும், பொதுநன்-மைக்குத் தடையாக இருக்கும் சிறிய வேறுபாடுகளை மறப்பதன் மூலமும், கடவுளின் தூய சித்தத்திற்கு இணங்காத அனைத்தையும் மாற்றுவதன் மூலமும் அமைதியையும், சமாதானத்தையும் நிலைக்கச் செய்வோம். இறைவன் குழந்தை இயேசுவை நமக்கு கொடையாகத் தந்தமைக்காக அவருக்கு நன்றி செலுத்தும் அதேவேளையில் நாம் அனைவரும் தூய ஆவியால் புதுப்பிக்கப்பட்டு உலகம் முழுவதையும் அன்பினால் கட்டியெழுப்ப ஒன்றிணைவோம். எம் நாட்டின் நல்லெண்ணம் கொண்ட குடிமக்களுக்கும் மற்றும் எம் இறை நம்பிக்கையாளர்களுக்கும் எமது கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS,
தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

# நத்தார் சிறப்பிதழ்









## மணமகள் தேவை

கொழும்பில் வசிக்கும் றோமன் கத்தோலிக்க, 31வயது நிரம்பிய மணமகனுக்கு வீட்டாரால் வரன் (மணமகள்) தேடப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு : 0777063626** (47231)



## மணமகன் தேவை

கொழும்பில் வசிக்கும் கத்தோலிக்க, 1993 பிறந்த தனியார் நிறுவனமொன்றில் தொழில் புரியும் பட்டதாரி மகளுக்கு மணமகன் தேவை. உள்நாடு, வெளிநாடு விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு : 070 2044914** (48575)

## கண்டி மறைமாவட்டத்தில் குருவாக இறைபணிபுரிய ஓர் அழைப்பு!

நீங்கள் க.பொ.த (சா/த) பரீட்சை அல்லது க.பொ.த (உ/த) பரீட்சை பூர்த்தி செய்த ஒரு மாணவனா?

**தொடர்பு கொள்ளுங்கள் :**
**அதிபர், புனித சூசையப்பர் சிறிய குருமடம்,**
**பூரணவத்தை, கண்டி**
**தொலைபேசி : 081-2222040** (47285)


## 07 பெத்லகேம்...

பெத்லகேமைக் கைப்பற்றியது. 1995ல் இருந்து பெத்லகேம் பாலஸ்தீன தேசிய அதிகாரத்தின் கீழ் (Palestinian National Authority) நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பெத்லகேமில் வாழ்கின்ற மக்களுள் பெரும்பான்மையோர் இஸ்லாம் சமயத்தவர். ஆனால் கிறிஸ்தவர்களும், கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர். பெத்லகேமின் வடக்கு நுழைவாயிலில் யூத இன மூதாட்டியும், யாக்கோபின் மனைவியுமான ராக்கேல் என்பவரின், கல்லறை உள்ளது. இது யூதர்களின் புனிதமான இடமாக கருதப்பட்டது.

## 14 தாழ்ச்சியில்...

நம்முடைய பணத்தை, பொருளை, நேரத்தை செலவு செய்ய வேண்டும். இயலாதவர்கள் தங்கள் அன்பையும், மன்னிப்பையும்கூட கொடுக்கலாம். நம்மீது பெருகிய அன்பினால் மாட்டுத் தொழுவத்தில் உருகிக் கிடந்த கடவுளின் அன்பை நினைவுகூர்வோம். கிறிஸ்மஸ் விழாவின் தாக்கமே மனிதரில் கடவுளைக் காண்பதும், ஏழையின் சிரிப்பினில் இறைவனைக் காண்பதும் தான். மேற்கூறியவைகளைக் கொஞ்சம் முயன்று பார்ப்போமா? இறையாசீரை நிறைவாய் பெற்றுக் கொள்ளலாமே!

## 02 கொழும்பு சங்கிரில்லா...

இத்தாக்குதலின் பின்பு முதன் முதலாக எமது மக்களுக்கு உதவிசெய்தவர்கள் முஸ்லிம் மக்களே. உலகம் முழுவதும் உள்ள பௌத்த தேரர்கள், பௌத்த மக்களும், டயலொக் நிறுவனம்,மேலும் பல நறுவனங்களும் உதவி புரிந்தன. எமக்கு கிடைத்த நிதி உதவிகளை நாம் உங்களுக்கு செலவழித்தோம், தொடர்ந்தும் செலவழிப்போம். புலமைப் பரிசில்களுக்காக உதவி புரிந்த இத்தாலி நகரின் புனித அந்தோனியார் பெசிலிக்காவின் பரிகாலகர் அருட்பணியாளர்கள் ஒன்று கூடியிருந்தனர். உயர்மறைமாவட்ட செத்சரண நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி லோறன்ஸ் ராமநாயக்க அடிகளாருடன் இத்தாலி - இலங்கை தொழிலமைப்பின் ஒருங்கமைப்பாளர் உட்பட அருட்பணியாளர்கள் பலரும் கலந்துக்கொண்டனர்.

# மெசஞ்சர் பத்திரிகையின் 150வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் - 2019.12.16













படங்கள் : திரு. சுனில்

**அன்பு வாசக நேயர்களே! எமது இதயம் நிறைந்த இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் Nயர்மாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல. 02 ஞானார்த்த பிரதீப்ப மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை மனோகுமாரன் நாகரட்ணம்